மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

மலர் 6 • இதழ் 3 • செப்டம்பர் 2021 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ்


VENMAI

## எண்ணங்கள்

# சுதேசி

## சுயசார்பு வாழ்க்கை சிறப்பிதழ்






RAMRAJ
COTTON
COTTON CARE
PRESTIGIOUS FIT
ANTI-VIRAL
DHOTIS • SHIRTS
HealthGuard®
RAMRAJ
ANTI-VIRAL
DHOTIS • SHIRTS
HealthGuard®
99.94%* EFFECTIVE AGAINST VIRUS
Brought to you in India by
*HealthGuard is effective when applied as directed tested strain: H1N1, as per ISO 18184



மதிப்பிற்குரியவர்களுக்கு...

RAMRAJ

காட்டன்

வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்


# சுதேசி

## சுயசார்பு வாழ்க்கை சிறப்பிதழ்



## காந்தி வேட்டியின் நூற்றாண்டு!

**(22, செப்டம்பர் 1921 22, செப்டம்பர் 2021)**

மகாத்மா காந்தி 1921 செப்டம்பர் மாதம் மதுரை வந்தார். சுற்றியுள்ள கிராமங்களுக்குச் சென்று ஏழை மக்களின் வாழ்வை தரிசித்தார். மேல் சட்டை அணியக்கூட வசதியின்றி வறுமையில் வாடியவர்களைப் பார்த்து அதிர்ந்தார். இடுப்பில் வேட்டி மட்டும் அணிந்து, செப்டம்பர் 22 அன்றிரவு பொதுக்கூட்ட மேடைக்கு வந்தார். அதன் பிறகு ஒற்றை வேட்டியே மகாத்மாவின் அடையாளம் ஆனது.

நெசவாளர்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை உண்டாக்கிய, காந்தியடிகள் நமது பாரம்பரிய வேட்டிக்கு மாறிய நூற்றாண்டை ராம்ராஜ் காட்டன் கொண்டாடுகிறது.

# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

பொதுவாக மக்கள் தங்கள் குறைகளைத் தெரிவிக்க தலைவர்களைத் தேடிச் செல்வர். ஆனால், மக்களைத் தேடிச்சென்று அவர்களின் கஷ்டங்களை உணர்ந்தவர் மகாத்மா காந்தி. தேசத்தந்தையாக ஒட்டுமொத்த இந்திய மக்களும் அவரை ஏற்றுக்கொள்ள இந்த தனித்துவமே காரணம்.

இங்கிலாந்து சென்று ஆங்கிலேயர்களைப் போல கோட் சூட் அணிந்து வழக்கறிஞர் தொழிலுக்கான பாரிஸ்டர் பட்டம் வாங்கியவர் காந்தி. சிறந்த தொழில்முறை வழக்கறிஞராக தென்னாப்பிரிக்காவில் பணியாற்றியவர். 130 ஆண்டுகளுக்கு முன்பே மாதா மாதம் லட்சக்கணக்கில் சம்பாதித்தவர். லண்டனில் படித்து பாரிஸ்டர் பட்டம் வாங்கினாலும், ஆங்கிலேயர்களைப் போல உடை அணிந்தாலும்,



லட்ச லட்சமாக சம்பாதிக்கும் தகுதி பெற்றிருந்தாலும், ஒரு வழக்கறிஞராக சமூக அந்தஸ்து பெற்றிருந்தாலும், 'நீ எங்கள் அடிமை. எங்களுடன் ஒன்றாக அமர்ந்து ரயிலில் பயணிக்க உனக்கு தகுதி இல்லை' என்று தென்னாப்பிரிக்காவில் அவரை ஆங்கிலேயர்கள் அவமதித்தபோது, ரயில் பெட்டியிலிருந்து வெளியில் தள்ளியபோது, அதைத் தனக்கு நேர்ந்த தனிமனித அவமானமாக அவர் உணரவில்லை.

'இங்கிலாந்தில் கல்வி கற்று வழக்கறிஞராக வாழ்வில் உயர்ந்த என்னிடமே இத்தகைய பாகுபாட்டை அவர்களால் காட்ட முடிகிறது. ஏழ்மையில் உழல்கிற பெரும்பாலான இந்திய மக்களை ஆங்கிலேயர்கள் எப்படி அடிமையாக நடத்துவார்கள்' என்று அவர் சிந்திக்கத் தொடங்கினார். அந்த சிந்தனையே, இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கியமான திருப்புமுனையை ஏற்படுத்தியது. தென்னாப்பிரிக்க நாட்டில் நன்றாகச் செய்த வழக்கறிஞர் தொழிலைக் கைவிட்டு இந்தியா திரும்பினார். விடுதலை வேள்வியில் தன்னை முழுவதுமாகக் கரைத்துக் கொண்டார். பல்வேறு மொழிகள் பேசுகிற இந்திய மக்களை ஒருங்கிணைக்க, நாடு முழுவதும் பயணித்த காந்தி, மக்களின் கஷ்டங்களை நேரடியாக கண்டறிந்தார். அதற்காக வருந்தினார். அவர்களின் துயரத்தை மாற்றாமல் இந்தியா விடுதலை அடைந்து ஒரு பயனும் இல்லை என்பதையும் உணர்ந்தார்.

காந்தியடிகளை மகாத்மாவாக மாற்றிய நிகழ்வுகளில், முக்கியமான ஒரு நிகழ்வு தமிழகத்தில் நிகழ்ந்தது. ஆங்கிலேயர்களைப் போல கோட், சூட் அணிந்த காந்தியடிகளை 'வேட்டி மட்டுமே உடுத்திய தேசத்தந்தையாக' மாற்றியது அந்த நிகழ்வு. இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிகமிக முக்கியமான தருணம் அது.

1921 செப்டம்பர் மாதம் 21, 22 மற்றும் 23 ஆகிய தேதிகளில் மதுரையில் சுற்றுப்பயணம் செய்த காந்தியடிகள் கண்ட காட்சி அவரை வெகுவாக பாதித்தது. சேலையின் ஒரு பகுதியை இடுப்பில் சுற்றியபடி, அதன் மறுபகுதியை ஆற்றில் துவைக்கிற பெண்களைப் பார்த்தார் காந்தி. மேலும் மேல்சட்டை அணிய வசதியின்றி வெறும் வேட்டி மட்டும் அணிந்த ஆண்களைப் பார்த்தார். ஒரு மனிதனின் அடிப்படைத் தேவையான உடைகளைக்கூட விலைகொடுத்து வாங்கமுடியாத சூழல் இருப்பதைக் கண்டு மனம் வெதும்பினார். அதிலும் உலக மனிதர்களின் மானம் மறைக்க நெசவுத் தொழில் செய்கிற நெசவாளர்கள், ஒரு அழுக்கு வேட்டியை மட்டுமே உடுத்தும் நிலையில் வாழ்ந்தனர் என்பதைக் கவனித்த காந்தியடிகளின் மனதில் மிகப்பெரிய மாற்றம் நிகழ்ந்தது. அதுதான் இந்திய வரலாற்றில் அவரை மறையாத சித்திரமாக மாற்றியது.

எப்போதும் விலையுயர்ந்த மேலை நாட்டு உடைகளை அணிவதில் ஆர்வம் கொண்ட காந்தியடிகள், நமது பாரம்பரிய உடையான வேட்டியை மட்டும் உடுத்துகிற முடிவுக்கு வந்தார். 'இந்திய மக்கள் அனைவரும் என்றைக்கு முழு ஆடை அடைகிறார்களோ, அன்றுதான் நானும் மேல்சட்டை அணிவேன்' என்று சூளுரைத்தார். எத்தனையோ பேர் எடுத்துச் சொல்லியும் தான் எடுத்த கொள்கை முடிவிலிருந்து அவர் மாறவே இல்லை.

ஒரு பள்ளி நிகழ்வில் மாணவர்களைக் காந்தியடிகள் சந்தித்தபோது, ஒரு பணக்கார வீட்டுப் பையன், 'காந்தி மேலாடை உடுத்த வசதியின்றி வெறும் வேட்டி மட்டும் அணிகிறார்' என்று தவறாக நினைத்தான். ''எங்கள் வீட்டில் நிறைய சட்டைகள் இருக்கின்றன. அவற்றில் உங்களுக்கு சில சட்டைகள் தருகிறேன்'' என்று அவரை நெருங்கிவந்து சொன்னான். காந்தியடிகள் சிரித்துக்கொண்டே, ''எனக்கு 40 கோடி சட்டைகள் வேண்டும். உன்னிடம் இருக்கிறதா?'' என்று கேட்டாராம். 'அனைத்து இந்தியர்களுக்கும் முழுமையான உடைகள் கிடைக்கும்வரை தான் வேட்டியைத் தவிர வேறு உடை உடுத்த மாட்டேன்' என்பதில் மகாத்மா உறுதியாக இருந்தார்.

நெசவாளர்களின் துயர் நீக்குவதற்காக கதர் ஆடைகளை நாடு முழுவதும் விற்பனை செய்ததும், சுதேசி துணிகளை விற்று, அதை இந்திய விடுதலைப் போராட்ட வடிவமாக மாற்றியதும் காந்தியின் மகத்தான சாதனை. இந்தியர்களின் சுதேச உணர்வைத் தட்டியெழுப்ப, 'வேட்டி மட்டுமே உடுத்துவது' என அவர் எடுத்த முடிவு முக்கிய காரணமானது. அந்த முடிவே நம் நெசவாளர் வாழ்வாதாரத்தை மீட்டு எடுத்தது. ஆங்கிலேயர் ஆடைகளை மக்கள் மனம் துறக்கவும் காரணமானது.

1921ம் ஆண்டு காந்தி வேட்டிக்கு மாறிய நிகழ்வு சரித்திரமாக மாறியது. அவர் வேட்டி மட்டுமே உடுத்துவேன் என எடுத்த முடிவு நடைமுறையாகி, நூறாண்டுகள் நிறைவு பெறுகிறது. நமது பாரம்பரிய அடையாளமான வேட்டிகளை உற்பத்தி செய்து, அதை மதிப்புமிகுந்த உடையாக மாற்றி, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை வேட்டி உடுத்தச் செய்வதை தன் லட்சியமாகக் கொண்ட ராம்ராஜ் காட்டன் நிறுவனம், மகாத்மா காந்தியடிகளை உளமார வணங்குகிறது.

தன்னுடைய கொள்கைகளைப் பறைசாற்ற 'நவஜீவன்' பத்திரிகையை குஜராத்தி, தமிழ் உட்பட பல இந்திய மொழிகளில் காந்தி நடத்தினார். அவரின் அடியொற்றி ராம்ராஜ் காட்டன் நிறுவனம் 'வெண்மை எண்ணங்கள்' இதழை தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளில் நடத்துகிறது. நற்சிந்தனைகளைப் பரப்பி, வாடிக்கையாளர்களை வாசகர்களாக மாற்றும் உன்னதப் பணியை பல ஆண்டுகளாக தொடர்ந்து செயல்படுத்துகிறது.

காந்தியடிகள் வேட்டி அணிய ஆரம்பித்த நூற்றாண்டை ராம்ராஜ் காட்டன் கொண்டாடுகிறது. 'வெண்மை எண்ணங்கள்' இதழில் வருகிற 2022 செப்டம்பர் மாதம் வரை ஒவ்வொரு மாதமும் ஒரு பக்கத்தில் மகாத்மாவின் நினைவுகளைப் போற்றும் சிந்தனைகளை வெளியிட முடிவு செய்திருக்கிறோம். அண்ணல் விதைத்த சுதேசி உணர்வை நாட்டு மக்களிடம் கொண்டு சேர்க்க ராம்ராஜ் காட்டன் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொள்ளும்.

காந்தியடிகளின் கொள்கைகளும், சுதேச வாழ்வும் நாட்டிற்கு மட்டுமின்றி தனிமனித முன்னேற்றத்திற்கும் வழிகாட்டும் வல்லமை கொண்டவை. சுதேசி உணர்வும், நம் பாரம்பரியத்தைப் போற்றும் சுயசார்பு வாழ்க்கையும்தான் இந்தியாவை வளர்ந்த நாடாக உயர்த்தும். நமக்கு செல்வாக்கு, மரியாதை, அந்தஸ்து வழங்கும். இம்மாத 'வெண்மை எண்ணங்கள்' அதற்கு வழிகாட்டும்.

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்..! வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்..!

**கே.ஆர்.நாகராஜன்**
**நிறுவனர் - ராம்ராஜ் காட்டன்**



# உடையே நம் அடையாளம்!

நாம் என்ன உடை உடுத்துகிறோமோ, அதுவே நம் அடையாளம் ஆகிறது. நம் பாரம்பரிய உடையை உடுத்தும்போது, நம் முந்தையை தலைமுறைகளை, நம் முன்னோர்களின் அனுபவத்தை மதித்துப் போற்றுகிறோம். நம் மண்ணில் தயாராகும் உடையை உடுத்தும்போது, தேசபக்தி உணர்வு பொங்குகிறது. சுதேசி வாழ்க்கை வாழ்கிறோம் என்ற பெருமிதம் கிடைக்கிறது. வேட்டி அணியும்போது நமக்குக் கிடைக்கும் பரவச உணர்வில் இந்த எல்லாமே கலந்திருக்கிறது.

தான் எந்த வகை ஆடை அணிந்தாலும் அதைப் பெருமிதமாகக் கருதினார் காந்தி. இந்திய சுதந்திரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த லண்டன் வட்டமேசை மாநாட்டில் பங்கேற்கச் சென்றார் மகாத்மா காந்தி. நடுங்கும் குளிரில் பிரிட்டன் தலைநகர் லண்டனில் ஒற்றை வேட்டியை கம்பீரமாக அணிந்தபடி வலம் வந்தார் காந்தி. பிரிட்டிஷ் மகாராணியையும் மன்னரையும் அதே கோலத்தில் சந்தித்துப் பேசினார். பக்கிங்காம் அரண்மனையிலிருந்து வெளியில் வந்த காந்தியிடம், ‘‘மன்னர் அணிந்திருந்த ஆடம்பரமான உடைகளைப் பார்த்ததும், குறைவாக உடுத்தியிருக்கிறோம் என உங்களுக்குத் தோன்றியதா?’’ என்று கேட்டார்கள். ஆனால் காந்தி, ‘‘எனக்கும் சேர்த்து அவர் நிறைய உடைகள் அணிந்திருந்தார்’’ என்று சொல்லி சிரித்தார்.

அப்போதைய பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் இந்த சந்திப்பை கடுமையாக விமர்சித்தார். ‘அரை ஆடை அணிந்த பக்கிரி’யை அரச குடும்பம் சந்தித்துப் பேசியது பிரிட்டிஷ் மரபுக்கு இழுக்கு என்பது அவர் வாதம். ஆனால் இந்த அரை ஆடை அணிந்த மனிதரை இந்திய மக்கள் மட்டுமில்லை, பிரிட்டன் மக்களும் ஆராதித்தனர்.

காந்தியை இப்படி ஒற்றை வேட்டி மட்டுமே போதும் என முடிவெடுக்க வைத்தது தமிழ் மண்தான்.

இளம் வயதில் பாரம்பரிய குஜராத்தி உடைகளை அணிந்தவர்தான் காந்தி. லண்டனில் சட்டம் படிக்கச் சென்றபோது கோட், சூட், பட்டுத் தொப்பி, கையில் பிரம்பு என மாறினார். அந்த நாளில் ஐரோப்பியாவில் கல்வி பயின்ற இந்திய மேல்தட்டு வர்க்கத்தினர் இப்படித்தான் இருந்தனர். தென்னாப்ரிக்காவுக்கு வழக்கறிஞர் பணி செய்யச் சென்றபோதும் அப்படித்தான் இருந்தார் காந்தி. ஆனால், தனது இந்திய அடையாளத்தை உணர்த்தும் வகையில் தலையில் தலைப்பாகை வைத்துக்கொண்டார்.

தலைப்பாகையுடன் நீதிமன்றத்திற்கு வந்த காந்தி, நீதிமன்ற மரபை மீறிவிட்டதாகக் கருதினார் நீதிபதி. ‘‘தலைப்பாகையைக் கழற்றுங்கள். அல்லது நீதிமன்றத்தை விட்டு வெளியேறுங்கள்’’ என ஆணையிடுகிறார். தலைப்பாகையைக் கழற்ற மறுத்தார் காந்தி. ‘‘இது எங்கள் பாரம்பரிய அடையாளம், கழற்ற முடியாது. அதற்கு பதிலாக நீதிமன்றத்திலிருந்து வெளியேறுகிறேன்’’ என்றார்.

கோட், சூட் அணிந்த நவ நாகரிக மனிதராகவே தென்னாப்ரிக்காவிலிருந்து தாயகம் திரும்பிய மகாத்மா, சுதந்திரப் போராட்ட உணர்வை மக்களிடம் ஏற்படுத்த நாடு முழுவதும் சுற்றி வந்தார். 1921ம் ஆண்டு செப்டம்பர் 20, 21, 22 ஆகிய தேதிகளில் அவர் மேற்கொண்ட மதுரைப் பயணம்தான், ஒற்றை வேட்டியை மகாத்மாவின் அடையாளம் ஆக்கியது.

மதுரை மேல மாசி வீதியில் இருந்த ராம்ஜி கல்யாண்ஜி இல்லத்தில் தங்கிய அவர், சுற்றியுள்ள கிராமங்களுக்குச் சென்று ஏழை மக்களின் வாழ்வை தரிசித்தார். பலரும் உடுத்த சரியான ஆடையின்றி குளிரில் வாடுவதைக் கண்டார். கோவணத்துடன் வயல்களில் வேலை செய்த ஏழை விவசாயியைப் பார்த்து அதிர்ந்தார். 'ஒரு துணிக்கும் அதிகமாக இரண்டாவது துணி வாங்கவும் இயலாத நிலையில் நாட்டில் பெரும்பான்மை மக்கள் இருக்க, தனக்கு மட்டும் ஏன் இந்த ஆடம்பரம்' என அவருக்குள் உறுத்தல் எழுந்தது.



அன்றிரவே காந்தி திடலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்ற வந்தபோது இடுப்பில் ஒற்றை வேட்டி அணிந்து, மேலே சட்டை ஏதும் அணியாமல், மேலாடை போர்த்தியபடி மேடையில் தோன்றினார். இப்படி அவரது ஆடை மாற்றம் தமிழகத்தில்தான் நிகழ்ந்தது. அன்று முதல் கைராட்டையும் வேட்டியுமே அவரது அடையாளங்களாகின. குண்டடிபட்டு இறக்கும் வரை அவர் வேட்டியைத் தவிர மேலாடை எதுவும் அணியவில்லை.

'அந்நியத் துணிகளைப் புறக்கணிக்க வேண்டும்' எனச் சொல்லி அவர் சுதேசி இயக்கத்தைத் துவக்கியதன் நோக்கங்கள் இரண்டு. ஒன்று, இந்தியாவின் ஏழை நெசவாளர்கள் வாழ்வு பெற வேண்டும் என்பது; இரண்டாவது, விவசாயிகளின் துணைத் தொழிலாக நெசவு ஆக வேண்டும்; அதன்மூலம் அவர்களின் வாழ்வு மேம்பட வேண்டும் என்பது.

'சுதேசி என்று நான் கருத்தில் கொண்டிருப்பது இந்தியாவின் தேவைகளுக்குப் போதுமான துணியை உற்பத்தி செய்வதேயாகும்; உள்நாட்டில் உற்பத்தியைத் தூண்டி விடுவதற்காக மக்கள் சுதேசித் துணியை மட்டுமே பயன்படுத்த உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன் இந்தியப் பெண்கள் உள்நாட்டுத் தேவைக்கு மட்டுமின்றி வெளிநாடுகளின் கிராக்கிக்காகவும் நூல் நூற்றார்கள். அவர்கள் முரட்டு நூல்களை மட்டுமின்றி உலகிலேயே மிக மெல்லிய நூலையும் நூற்றார்கள். நமது முன்னோர்கள் நூற்றது போன்ற மெல்லிய நூலை எந்த இயந்திரமும் இன்று வரை நூற்க முடியவில்லை. அப்போது நம்முடைய துணி அனைத்தையும் நாமே உற்பத்தி செய்தோம்.

நமது பெண்கள் மிக நேர்த்தியான நூல் நூற்றார்கள். நெசவாளர்கள் அந்த நூலை நெய்தார்கள். விவசாய வேலை பார்த்த பெண்கள், தங்களுடைய ஓய்வு நேரத்தை மிக இயற்கையான முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கு அது உதவியது. இன்று நமது மகளிர் தங்கள் கைத்திறனை இழந்து விட்டார்கள். கோடிக்கணக்கான மக்கள் கட்டாயமாக சோம்பி இருப்பதால் நாடு வறுமையடைந்துவிட்டது. கலைத்திறன் மிக்க நெசவாளர் இனத்தில் பாதிப் பேர் மறைந்து போயினர். கையால் நூற்ற மெல்லிய நூல் இல்லாத காரணத்தால், மீதிப்பேர் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு நூலை நெசவு செய்து கொண்டிருக்கிறார்கள்' என நூறு ஆண்டுகளுக்கு முன்பு வருத்தத்தோடு சொன்னார் காந்தி.

இந்த நிலையை அவர் மாற்ற முயன்றார். நமது தேசத்தில் உருவான ஆடைகளை அணிவதே நமக்கு கண்ணியம் தரும்; நமது தன்மானத்தின் அடையாளம் அதுதான் என நம்பினார் அவர்.

1921ம் ஆண்டு பிரிட்டிஷ் பொருட்களை புறக்கணிக்கும் இயக்கம் உச்சத்தில் இருந்தபோது மகாத்மா காந்தியின் தலைமையில் டெல்லியில் மாபெரும் தீ வளர்த்து விலையுயர்ந்த ஆடைகள் எரிக்கப்பட்டன. அதைப் பார்த்து வேதனைப்பட்ட காந்தியின் ஆங்கிலேய நண்பர் சி.எஃப்.ஆண்ட்ரூஸ், ''இந்தத் துணிகளை எரிப்பதற்கு பதிலாக ஏன் அவற்றை ஏழைகளுக்குக் கொடுக்கக்கூடாது?'' என்று கேட்டார். அதற்கு காந்தி சொன்ன பதில்... ''எங்கள் ஏழைகளுக்குக்கூட தன்மானம் உண்டு!''

காந்தி இந்தியாவின் அடையாளம். நம் பாரம்பரிய ஆடைகளும் வேட்டியும் நம் தன்மானத்தின் அடையாளம்! ●

## குறை சொல்லாதீர்கள்!

காந்திஜியிடம் ஆலோசனை செய்வதற்காக ஒருமுறை நேருவும் படேலும் வந்திருந்தனர். அப்போது காந்திஜி ஆசிரமப் பயிற்சியாளர்களுக்கு 'செருப்பு தைப்பது எப்படி' என்று வகுப்பு எடுத்துக் கொண்டிருந்தார். ''துண்டுகளை இப்படிப் பொருத்த வேண்டும். தையலை இப்படிப் போட வேண்டும். அடிப்பாகம் அதிக எடையைத் தாங்குவதால் சரியான முறையில் அதனைப் பொருத்த வேண்டும்'' என்றெல்லாம் செய்முறைப் பயிற்சி தந்து கொண்டிருந்தார்.

அதைப் பார்த்த நேருவும் படேலும், ''உங்கள் பொன்னான நேரத்தை இப்படி வீணடிக்கிறீர்களே! இதையெல்லாம் நீங்கள் செய்ய வேண்டுமா?'' என்று கேட்டனர். காந்திஜிக்குக் கோபம் வந்து விட்டது. ''வேண்டுமானால் நீங்களும் வந்து நல்ல ஜோடி செருப்பை எப்படித் தைப்பது என்று கற்றுக் கொள்ளுங்கள். இதைச் சரியாகச் செய்பவர்கள், எதையும் சரியாகச் செய்யமுடியும்'' என்றார்.


நேருவும் படேலும் வாயடைத்துப் போனார்கள்.



## வீண் செய்யக்கூடாது!

கிழிந்த துணிகளைத் தூக்கிப் போடாமல் தானே தைத்து உடுத்திக் கொள்வார் காந்திஜி. அதை அவர் கடைசி வரை கடைபிடித்தார். ஒருமுறை காந்தி உடுத்தியிருந்த வேட்டி கிழிந்திருந்தது. அதைப் பார்த்த ஒருவர், "பாபு! உங்கள் வேட்டி கிழிந்திருக்கிறது" என்று சொன்னாராம். காந்தி குளியலறைக்குச் சென்று, கிழிசல் வெளியே தெரியாதபடி வேட்டியைத் தலைகீழாக உடுத்திக் கொண்டு வந்தாராம். வேட்டியில் கிடைக்கும் இந்த வசதி எதிலும் இல்லை. வந்தவர், "பார்! எங்கே கிழிந்திருக்கிறது? இந்த வேட்டியில் கிழிய இன்னும் நிறைய இடமிருக்கிறது" என்றாராம்.

மகாத்மாவுக்கு எதையும் வீண் செய்யக்கூடாது. கடைசிவரை உபயோகிக்க வேண்டும். எதையும் உபயோகிக்காமல் தூக்கிப் போடுவது அவருக்குப் பிடிக்காது.




## என் பசி இந்தியாவின் பசி!

காந்திஜி ஒருமுறை வங்காளம் சென்றிருந்தார். மக்கள் அவரை சந்தித்து நன்கொடை வழங்கிக் கொண்டிருந்தார்கள். கல்கத்தாவின் மிகப் பெரிய பணக்காரக் குடும்பத்திலிருந்து சில பெண்கள் அவரை தரிசிக்க வந்திருந்தார்கள். காந்திஜியை வணங்கிவிட்டு, கொஞ்சம் பணத்தைக் கையில் எடுத்து அவருடைய காலடியில் சமர்ப்பித்தார்கள். காந்திஜி பணத்தைப் பார்த்துவிட்டு, ''இவ்வளவுதானா?'' என்றார். உண்மையிலேயே அதில் போதுமான பணம் இருந்தது.

அருகில் இருந்த தொண்டர் ஒருவர், ''பாபு, நன்றாகப் பாருங்களேன். இது குறைவாகவா தோன்றுகிறது? உங்களுடைய பசி அடங்குவதில்லையே'' என்றார். காந்திஜி உடனே, ''நீ சரியாகவே சொன்னாய். என்னுடைய பசி எப்படி அடங்கும்? எனது பசி இந்தியாவின் பசி ஆயிற்றே" என்று அமைதியாகச் சொன்னார்.





## மாலையும் உணவும்!


1925ம் ஆண்டு காங்கிரஸ் பொறுப்புகளிலிருந்து விலகிய காந்திஜி, அடுத்த மூன்று ஆண்டுகள் கிராமம் கிராமமாகச் சென்று ராட்டையில் நூல் நூற்பது பற்றியும், சுய தொழில் செய்வதைப் பற்றியும் மக்களிடம் பேசி சுதேசி உணர்வை மனதில் பற்ற வைத்தார். அவ்வாறு ஒருமுறை பேசியபோது கிராம மக்கள் சேர்ந்து காந்தியடிகளுக்கு மலர் மாலை அணிவித்தனர். அவர்களைப் பார்த்து காந்தி, ''இந்த மலர்மாலைக்காக நீங்கள் செலவழித்த ஒவ்வொரு ரூபாயும் 16 பேருக்கு ஒருவேளை உணவு வாங்கித் தர உதவும். பணத்தை வீணடிக்காதீர்கள்'' என்று கூறினார்.



## இதுதான் காந்தி கணக்கு!

'காந்தி கணக்கு' என்றாலே, செலவு இல்லாமல் இலவசமாக எதையும் பெறுவது என்று நினைக்கிறோம். இதற்கான உண்மை அர்த்தம் என்ன? மகாத்மா காந்தி உப்பு சத்தியாக்கிரகம் மேற்கொண்டிருந்தபோது அவருக்கு வியாபாரிகள் அத்தனை பேரும் மானசீகமாக ஆதரவு அளித்தனர்.

''நேரடியாக நாங்கள் போராட்டத்தில் கலந்துகொள்ள முடியாது. ஆனால், நாங்கள் போராட்டத்திற்கு ஆதரவு அளிப்போம். இதில் பங்கேற்கும் தொண்டர்களை எங்கள் கடைகளில் எது வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளச் சொல்லுங்கள். பணம் தர வேண்டாம். அடையாளம் தெரியாமல் பணம் கேட்க நேரும்போது 'காந்தி கணக்கு' என்று மட்டும் சொன்னால் போதும். நாங்கள் அவர்களிடம் பணம் கேட்க மாட்டோம்'' என்றார்கள் வியாபாரிகள். அப்படி வந்ததுதான் காந்தி கணக்கு.



## நிச்சயமில்லை!

ஒருமுறை மகாத்மா காந்தி ரயிலில் டார்ஜிலிங் சென்றார். டார்ஜிலிங் மலைப் பாதையில் அந்த மலை ரயில் மேலேறிச் சென்றது. அப்படி மலைப் பாதையில் போனபோது, எஞ்சினுக்கும் மற்ற பெட்டிகளுக்கும் இடையே உள்ள இணைப்பு திடீரென உடைந்துவிட்டது. எஞ்சின் மட்டும் மேலே செல்ல, மற்ற ரயில் பெட்டிகள் கீழ் நோக்கி ஓட ஆரம்பித்தன. மலைப் பாதையில் ரயில் பெட்டிகள் கீழ் நோக்கி, கட்டுப்பாடு இல்லாமல் ஓடினால் என்ன ஆகும் என்று கற்பனை செய்து பாருங்கள். உள்ளே இருந்த மக்கள் பீதி அடைந்து அலறினார்கள்.

ரயில் பெட்டிகள் பக்கத்திலிருந்த பள்ளத்தாக்கில் விழுந்தால், ஒருவருக்கும் எலும்புகூட மிஞ்சாது. அந்தக் கொந்தளிப்பான சூழ்நிலையிலும் மகாத்மா காந்தி தான் அனுப்ப வேண்டிய கடிதங்களை எழுதிக் கொண்டிருந்தார்.

''பாபு ! நாம் உயிர் பிழைப்பதே நிச்சயமில்லை. இந்த நேரத்தில் இதெல்லாம் தேவையா?'' என்று ஓர் உதவியாளர் கேட்டார். மகாத்மா அமைதியாக பதில் சொன்னார். ''இறந்து விடுவோம் என்றால் ஒன்றும் இல்லை. இதில் பிழைத்து விடுவோம் என்றால், இவ்வளவு நேரத்தை வீணடித்திருப்போம் அல்லவா? நான் நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை'' என்றார்.

# காந்தியின் கனவை நனவாக்கிய

# ராம்ராஜ் காட்டன்!

ஒரு நல்ல செயலுக்கான விதை, ஒரு நல்ல எண்ணத்தில் இருந்தே உருவாகிறது. ‘அந்நிய நாட்டில் தயாராகும் உடைகளை நாம் உடுத்தினால், நம் நாட்டின் ஏழை நெசவாளர்கள் வறுமையில் வாடுவார்கள்’ என்று கவலைப்பட்டார் மகாத்மா காந்தி. அதனால் அவருக்குள் தோன்றிய எண்ணம்தான், சுதேசி. தெருத்தெருவாக சுதேசி உடைகளை விற்கும் காந்தியின் செயலுக்கு அதுவே விதையாக அமைந்தது. அவரின் கைராட்டை சுழலச் சுழல, நெசவாளர்களின் வாழ்வு மேம்பட்டது. சுதந்திரப் போராட்டமும் தீவிரமானது.

மதுரையில் காந்தியின் மனதில் தோன்றிய எண்ணத்திற்கு வலிமை அதிகம். அப்படி ஒரு வலிமையான நல்லெண்ணமே ராம்ராஜ் நிறுவனத்தின் அஸ்திவாரமாகியது. ராம்ராஜ் காட்டன் நிறுவனர் கே.ஆர்.நாகராஜன் அவர்கள் இளம் வயதில் கல்வியை முடித்துவிட்டு, தொழில் தொடங்க ஆசைப்பட்டார். தொழிலுக்கான அனுபவம் பெறுவதற்காக, திருப்பூரில் ஒரு ஜவுளிக்கடையில் பணிபுரிந்தார்.

அந்த ஜவுளிக் கடைக்கு, தாங்கள் நெசவு செய்த துணிகளை விற்பதற்காக நெசவாளர்கள் வருவார்கள். உலகத்திற்கே உடை நெய்து மானம் காக்கிறவர்கள், வெறும் வேட்டி மட்டுமே உடுத்தி, மேல்சட்டை அணிய வசதி இல்லாமல் இருப்பார்கள். இப்படியானவர்களைப் பார்த்துதான் காந்தி மேல்சட்டை அணிவதை தவிர்த்து பாரம்பரிய உடையான வேட்டியை மட்டுமே அணிந்தார்.



விடுதலை பெற்று 35 ஆண்டுகள் கடந்த பிறகும், நெசவாளர்கள் மேல்சட்டை அணியும் வசதி இல்லாமல் இருந்தனர்.

தங்கள் உழைப்பில் நெய்த ஆடைகளைக் கொண்டு வந்து காலையிலேயே ஜவுளிக் கடையில் கொடுத்துவிட்டு, தங்கள் கூலியைப் பெறுவதற்காக வாசலில் காத்திருப்பார்கள் நெசவாளர்கள். அவர்களுக்கு உடனே அதைக் கொடுத்து அனுப்பினால், அவர்கள் விரைவாக வீடு திரும்பி வேலையைத் தொடர்வார்கள். ஆனால், அப்படிப் பணத்தைக் கொடுக்காமல் கடையின் வாசலில் உட்கார நாற்காலிகூட இல்லாமல் தரையில் அமர்ந்து மணிக்கணக்கில் காத்திருக்க வைப்பார். இந்தக் காட்சியைப் பார்த்து பதறிப்போனார் நாகராஜன். ஜவுளிக் கடை பணியாளர்களுக்கு காலையில் தேநீர் வரும்; மதியம் உணவு வரும். ஆனால், வெறும் வயிற்றுடன் காத்திருப்பார்கள் நெசவாளர்கள். அவர்கள் ஜவுளிக் கடை வாசலில் உழைத்த கூலிக்காகக் காத்திருக்க, வீட்டில் நெசவாளர் குடும்பமே கால் வயிறு நிரம்பினால்கூட போதுமென பசியோடு காத்திருக்கும்.

நெசவாளரிடம் உழைப்பை மட்டும் சரியான நேரத்தில் வாங்கிக் கொண்டவர்கள், கொடுக்க வேண்டிய உழைப்பின் கூலியை மட்டும் காத்திருக்க வைத்து மாலையில் கொடுப்பார்கள். அதையும் முழுமையாகக் கொடுக்காமல், பாதியைக் கொடுப்பார்கள். கிடைத்தப் பணத்தை எடுத்துக்கொண்டு அவசர அவசரமாக வீடு திரும்பினால் மட்டுமே அவர்கள் வீட்டின் அடுப்பில் உலை கொதிக்கும். இதைக் கண்டு நாகராஜன் அவர்களின் மனம் கொதித்தது.

‘மாலையில் கொடுக்கிற கூலியைக் காலையில் கொடுத்தால், அவர்கள் சீக்கிரம் போய் இன்னும் அதிகமாக உடைகளை நெய்வார்கள்தானே’ என்று நாகராஜன் தன் முதலாளியிடம் கேட்க, ‘இதற்கு மேல் உடைகளைத் தயாரித்தால், அடுத்த கடைக்குச் சென்று உடைகளை விற்பார்கள். பிறகு நமது கடைக்கு ரிஸ்க்’ என்று முதலாளி சொன்ன பதிலை நாகராஜன் மனம் ஏற்கவில்லை.

அதுவரை, ‘சொந்தமாக தொழில் செய்ய வேண்டும்’ என்று நினைத்துக்கொண்டிருந்தவருக்கு, ‘இந்த நெசவாளர்களுக்காக நாம் சொந்தமாகத் தொழில் செய்ய

வேண்டும்' என்று எண்ணமும் அர்த்தமுள்ள காரணமும் அமைந்தன.

'உழைப்பவர்களை வறுமையிலேயே வைத்திருப்பதைவிட, அவர்களின் வாழ்வை உயர்த்துவதே சமுதாயத்திற்கு செய்ய வேண்டிய கடமை' என்பதை உணர்ந்தார். 'தொழிலில் வெற்றிபெற நல்ல நோக்கமும், உழைப்பும் இருந்தால் போதும். அதுவே நம்மை உயர்த்தும்' என தெளிவு பெற்றார். திருப்பூர் மாநகரில் வெளிநாடுகளுக்குத் தேவையான ஆயத்த ஆடைகளைத் தயாரித்து ஏற்றுமதி செய்பவர்கள் எளிதில் வெற்றி பெறலாம் என்ற நிலை இருந்தது. ஆனால், 'சுதேசி உணர்வுடன் உள்நாட்டில் தரமான ஆடைகளைத் தயாரித்து விற்பனை செய்தால் மட்டுமே, நெசவாளர்கள் நிலைய உயர்த்தும் நோக்கம் நிறைவேறும்' என்று உணர்ந்தார்.

'நெசவாளர்கள் மூன்று வேளையும் சுடுசோறு உண்ண வேண்டும்; முழு உடம்பையும் மறைத்து மானத்துடன் வாழ வேண்டும்' என்பதே நாகராஜன் அவர்களின் கனவு. உடுத்த ஆடை தருபவர்கள், உரிய மரியாதையுடன் வாழ, நெசவாளர்களின் கூலியை உயர்த்திக் கொடுப்பதே தீர்வு என்று முடிவு செய்தார். அன்றைய சூழலில் மீட்டருக்கு 2 ரூபாய் என்பதே நெசவாளர்கள் பெற்ற கூலி.

மூன்று வேளையும் உணவருந்த வேண்டுமானால், மீட்டருக்கு ஒரு ரூபாய் உயர்த்த வேண்டும். முழு உடம்பையும் மறைக்க மேல் சட்டை உடுத்த வேண்டுமானால், மேலும் 1 ரூபாய் உயர்த்த வேண்டும். அதாவது கூலியை இரண்டு மடங்காக உயர்த்திக் கொடுத்தால் மட்டுமே முடியும். வியாபாரத்தைப் பெருக்கினால் நெசவாளர்களுக்கு இரண்டு மடங்கு கூலியை உயர்த்த முடியும். 'நல்ல எண்ணங்களுக்கு வலிமை அதிகம்' என்பதை உணர்ந்த நாகராஜன், ''மீட்டருக்கு 4 ரூபாய் கூலி தருகிறேன்'' என்று சொன்ன போது, நெசவாளர்களே நம்பவில்லை.


'இவ்வளவு கூலி உயர்த்தினால், பொருளின் விலை கூடும். பிறகு உங்கள் வியாபாரம் குறையுமே' என்று நெசவாளர்கள் நாகராஜன் அவர்களிடம் கவலைப்பட்டார்கள். அவர் நெசவாளர்களின் நலன் பற்றி சிந்திக்க, நெசவாளர்களோ ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் நலன் பற்றி சிந்தித்தனர்.



இப்படித்தான் நிறுவனத்திற்கும் நெசவாளர்களுக்கும் பிரிக்க முடியாத பந்தம் உருவானது. ''நீங்கள் தரமாக உடைகளை நெய்து கொடுங்கள். விற்பனை செய்வதை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என நம்பிக்கையுடன் கூறினார். தரத்தின் மதிப்பை உணர்ந்து மக்கள் பெரும் வரவேற்பு கொடுத்து, அந்த நம்பிக்கையை நிஜமாக்கியுள்ளனர்.

ஓர் உயரிய எண்ணம் கே.ஆர்.நாகராஜன் அவர்களின் மனதில் விதையாக விழுந்து, ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் மூலம் விருட்சமாக வளர்ந்து ஒரு புதிய சரித்திரத்தை எழுதத் தொடங்கியது. இன்று 50,000க்கும் அதிகமான நெசவாளர் குடும்பங்களின் முன்னேற்றத்திற்கு ராம்ராஜ் காட்டன் நிறுவனம் துணை நிற்கிறது. இதையே தன்னுடைய உண்மையான வெற்றியாகக் கருதுகிறார் கே.ஆர்.நாகராஜன். வாழ்வில், நமது பாரம்பரிய உடை புறக்கணிக்கப்படுவதற்கும், நெசவுத் தொழில் செய்பவர்கள் வறுமையில் வாடுவதற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. கே.ஆர்.நாகராஜன் அவர்கள் வேட்டி கட்டியதால் ஏற்பட்ட அவமானமும், ஏழை நெசவாளர்கள் மீது கொண்ட அபிமானமும் இணைந்தே, ராம்ராஜ் காட்டனை நாட்டின் தலை சிறந்த நிறுவனமாக உயர்த்தியது. ராமராஜ் நிறுவனம் வியாபார லாப நோக்கோடு இயங்கக்கூடிய மற்ற நிறுவனங்களைப் போல அல்லாமல், நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை அடித்தளமாகக் கொண்டு காந்திய வழியில் வளர்ந்த நிறுவனம்; வளர்ந்துகொண்டிருக்கும் நிறுவனம் என்று பெருமிதமாகக் கூறலாம். நெசவாளர்கள் வாழ்வு மேம்பட வேண்டும் என்ற மகாத்மா காந்தியின் கனவை ராம்ராஜ் காட்டன் நனவாக்கி இருக்கிறது. நல்ல எண்ணங்களுக்கு என்றும் வலிமை அதிகம்.

# காந்திய சிந்தனைகள்



மனதின் ஜன்னல்களைத் திறந்து வைத்திருக்க வேண்டும். அதே சமயம், காற்றில் நமது கால்கள் அடித்துக்கொண்டு போய்விடக்கூடாது.

எவனொருவன் தினமும் இறை வணக்கத்தில் ஈடுபடுகிறானோ அவன் தினம் தினம் புதியதைச் சேர்க்கிறான். அந்தப் புதிய விஷயங்களை எதனுடனும் ஒப்பிட முடியாது.

ஒருவன் தனக்குத் தேவையற்றதை விலைக்கு வாங்கினால், அது அவன் பணத்தை அவனே திருடுவதற்குச் சமமாகும்.

பொய்யால் எந்தப் பெருமையும் இல்லை; உண்மையால் எந்தச் சிறுமையும் இல்லை!

வெறும் ‘உண்மை’ என்ற வார்த்தைக்கு மதிப்பு இல்லை. உண்மையை மனிதர்கள் பின்பற்றி, அவர்களிடம் அது மாற்றத்தை ஏற்படுத்தி, அதை நிலைநாட்ட அவர்கள் தங்களையும் தியாகம் செய்யத் தயாராக இருப்பதுதான் உண்மை.

சுய மனக்கட்டுப் பாடுகளை உருவாக்கிக்கொள்பவரே உண்மையில் சுதந்திரமானவர்.

திருப்தி முயற்சியில் இருக்கிறது; முழுமையில் அல்ல. முழுமுயற்சிதான் முழுவெற்றி.

மனசாட்சியின் மெல்லிய குரல் எட்டிப் பார்க்கும் இடத்திற்கு, மனிதர்களின் சாதாரண குரல்கள் எட்டிப் பார்க்காது.



இந்த உலகில் எல்லா மனிதர்களுக்கும் போதுமான அளவுக்கு வளம் உள்ளது. ஆனால் ஒருவனின் பேராசை அளவுக்கு வளங்கள் இங்கில்லை.

இரவு படுக்கச் செல்லும் முன்பு கோபத்தைக் கைவிட வேண்டும்.

ஒரு டன் அளவுக்கு போதனை செய்வதை விட ஒரு துளி அளவு பின்பற்றுதலே சிறந்தது.



பலவீனர்கள் பிறரை மன்னிக்க மாட்டார்கள்; மன்னிப்பது என்பது வலிமையுடையோரின் குணம்.

நேரான பாதையிலிருந்து விலகியவன் ஒருபோதும் தன் இலக்கை அடைய மாட்டான்.

மகிழ்ச்சியற்ற நிலையில் மேற்கொள்ளும் எந்தச் செயலும், அதைப் பெறுபவருக்கோ வழங்கும் நமக்கோ எந்தப் பயனும் அளிக்காது.

எல்லா நீதிமன்றங்களையும் விட உயர்ந்தது மனசாட்சி எனும் நீதிமன்றம்தான்.

# காந்திய சிந்தனைகள்



எங்கே அன்பு இருக்கிறதோ, அங்கே வாழ்க்கை இருக்கிறது.

கோபமும் சகிப்புத் தன்மையின்மையும் சரியான புரிதலின் எதிரிகள்.

இறைவணக்கம், காலையின் சாவி; மாலையின் பூட்டு.

பலம் உடல் திறனால் அமைந்ததல்ல. மாறாக, அசைக்க முடியாத மனஉறுதியிலிருந்து வெளிப்படுவது.

மற்றவர்களைக் கெட்டவர்கள் என்று சொல்வதன் மூலம், நாம் நல்லவர்களாகி விட மாட்டோம்.

உண்மையான செல்வம், நல்ல உடல்நலம்தான். அது தங்கம், வெள்ளி அல்ல.

குறிக்கோளை அடையும் முயற்சியில்தான் மகிமை இருக்கிறது. அந்தக் குறிக்கோளை அடைவதில் இல்லை.

எப்போதுமே உங்கள் சிந்தனைகளை சுத்தமாக வைத்திருந்தால் எல்லாமே நன்றாகத்தான் இருக்கும்.



நீ மேற்கொள்ளும் செயல் உண்மையானதாக இருந்தால் அது எந்த காலத்திலும் பாதிப்பை ஏற்படுத்தாது.



எல்லாவற்றிற்கும் அறம்தான் அடிப்படை. அந்த அறத்திற்கே உண்மைதான் அடிப்படை.

உண்மை பொய்மையைக் கொல்கிறது. அன்பு கோபத்தை வெல்கிறது. தன்னை வருத்துதல் வன்முறையை அறுக்கிறது. இந்த உயரிய கொள்கைகள் துறவிகளுக்கானதல்ல; நமக்கானது.

நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது முக்கியமல்ல; நீங்கள் செய்கிறீர்கள் என்பதுதான் முக்கியம். ஏனெனில், நீங்கள் செய்யவில்லை என்றால், உங்களுக்காக எவரும் அதைச் செய்ய மாட்டார்கள்.


சுயமரியாதை இருக்கும் இடத்தில் எந்தவித பரிசீலனைக்கும் இடமில்லை.

நீங்கள் மானுடத்தின் மீது நம்பிக்கை இழந்துவிடக் கூடாது. மானுடம் என்பது ஒரு பெருங்கடல், அதன் சில துளிகள் அசுத்தமாக இருக்கிறது என்பதால் பெருங்கடலே அசுத்தம் என எண்ணிவிடக் கூடாது.

நமது செயல்களின் விளைவு என்னவாக இருக்கும் என்பதை நாம் அறிய முடியாது. ஆனால் ஒன்று, எதையுமே செய்யவில்லை என்றால் எதுவுமே விளையாது.



# காந்தி என்ற மாமனிதர்!



❖ மகாத்மா காந்தி ரொம்பவே கூச்ச சுபாவம் கொண்டவர். லண்டன் பல்கலைக்கழகத்தில் படித்து அவர் அட்டர்னி ஆனார். இந்தியா திரும்பி மும்பை நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றில் முதலில் வாதாடும்போது, அவர் கால்கள் நடுங்கின. வாய் குழறியது. என்ன பேசுவது என்று தெரியாமல் உட்கார்ந்துவிட்டார். லண்டனில் அவருக்குப் பாடம் நடத்திய ஆசிரியர்கள், இயேசுவின் மலைப் பிரசங்கம் பற்றி அடிக்கடி சொல்வார்கள். அதை அவர் முழுமையாக மனப்பாடம் செய்துவிட்டார். பின்னாளில் தென்னாப்பிரிக்காவில் கடன் வழக்குகளில் ஆஜராகச் சென்றபோது அது அவருக்குக் கைகொடுத்தது. அதனால் காந்திஜிக்கு ஏராளமான வாடிக்கையாளர்கள் கிடைத்தனர்.

❖ காந்திஜி வழக்கறிஞர் தொழிலில் 20 ஆண்டுகள் இருந்துள்ளார். எனினும், பெரும்பாலான வழக்குகளை இரண்டு தரப்பினரையும் அழைத்துப் பேசி சமரசத் தீர்வு கண்டுவிடுவார். ‘இதனால் நான் எதையும் இழக்கவில்லை. பணத்தைக்கூட இழக்கவில்லை. கண்டிப்பாக என் ஆத்மாவையும்தான்’ எனக் குறிப்பிடுகிறார். தென்னாப்பிரிக்காவில் இருந்த காலத்தில் அவரின் ஆண்டு வருமானம், 15,000 டாலர்கள். இந்தத் தொகை, இப்போதுகூட பல இந்தியர்களுக்கு கனவு வருமானம்.

❖ காந்திஜி தன் வாழ்நாளின் இறுதிக்காலம் வரை திரைப்படங்களை வெறுத்தார். சினிமா மூலம் தன் கருத்துகளைப் பாமர மக்களிடம் பரப்ப முடியும் என்று அவருக்குத் தோன்றவில்லை. ஆனால், தன் எண்ணங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்ல ரேடியோவைப் பயன்படுத்திக் கொண்டார். காந்திஜியின் முதல் ரேடியோ உரை, 1931ம் ஆண்டு இங்கிலாந்தில் இருந்தபோது ஒலிபரப்பானது. அமெரிக்க மக்களுக்காக அவர் ரேடியோவில் பேசினார்.

❖ காந்திஜிக்கு புகைப்படக் கலைஞர்களைக் கண்டாலே பிடிக்காது. புகைப்படம் எடுப்பதையும் விரும்பாதவர் அவர். வேடிக்கை என்னவென்றால், அந்த காலத்தில் அதிகமாக புகைப்படம் எடுக்கப்பட்ட தலைவரே அவர்தான்.

❖ அஞ்சல் அட்டைகள்தான் மிகவும் சிக்கனமான தகவல் தொடர்பு சாதனம் என்று கருதியவர் காந்திஜி. தன் வாழ்நாள் முழுக்க கடிதங்களை எழுதிக் குவித்தார்.

❖ மகாத்மா தனது வாழ்நாளில் எப்போதும் விமானப்பயணம் மேற்கொண்டதில்லை. அதிகாரம்

இருந்தும் ஒரு துளிகூட ஆடம்பரத்தை விரும்பாத உத்தமர் அவர்.

❖ காந்திஜி ஒருபோதும் அமெரிக்கா சென்றதில்லை. ஆனால், அங்கு அவருக்கு ஏராளமான தொண்டர்களும் நண்பர்களும் இருந்தனர். அந்த நண்பர்களில் ஒருவர், ஹென்றி ஃபோர்டு. அவருக்கு காந்தி தன் கையெழுத்திட்ட கைராட்டையைப் பரிசாக வழங்கியிருந்தார். அந்த கை ராட்டையை அவ்வப்போது சுற்றிய ஃபோர்டு, ''இந்த ராட்டை மிகவும் எளிய இயந்திரவியல் தத்துவத்தைக் கொண்டது. இது பொருளாதாரச் சுதந்திரத்தின் அடையாளச் சின்னம்'' என்று குறிப்பிட்டார்.

❖ அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் (அமெரிக்கா), தலாய் லாமா (திபெத்), ஆங் சான் சூ கியி (மியான்மர்), நெல்சன் மண்டேலா (தென் ஆப்ரிக்கா) மற்றும் அடோல்போ பெரஸ் எஸ்க்யுவெல் (அர்ஜென்டினா) ஆகிய ஐந்து பேரும், தாங்கள் மகாத்மா காந்தியின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டதாகக் கூறினர். அப்படிப்பட்ட பெருமை பெற்ற காந்திஜிக்கு நோபல் பரிசு கிடைக்கவில்லை. இது நோபல் பரிசுக்குத்தான் இழுக்கு; காந்திக்கு அல்ல.

❖ அமெரிக்காவின் பிரபலமான 'டைம்' பத்திரிகை, 'கடந்த நூற்றாண்டின் மிகச்சிறந்த மனிதர்' என்ற பெருமையை விஞ்ஞானி ஐன்ஸ்டீனுக்கு வழங்கியது. இரண்டாவது இடத்தை காந்திஜி பிடித்தார்.

❖ முதுமைக் காலத்தில் காந்திஜி பல் செட் அணிந்திருந்தார். அதை அவர் எப்போதும் அணிவதில்லை. சாப்பிடச் செல்லும்போது மட்டும் அணிவார். சாப்பிட்டு முடிந்ததும் அதை சுத்தப்படுத்தி, துடைத்து தன் இடுப்புத் துணியில் பத்திரமாக வைத்துக் கொள்வார்.

❖ தென்னாப்பிரிக்காவிலிருந்து காந்தி இந்தியா திரும்பி நூறாண்டுகள் நிறைவுபெற்றதை முன்னிட்டு 2015ம் ஆண்டு லண்டனில் காந்தி சிலை திறந்து வைக்கப்பட்டது. மகாத்மாவின் இந்த வெண்கலச் சிலை, பிரிட்டன் நாடாளுமன்ற சதுக்கத்தில் திறந்து வைக்கப்படும் முதல் இந்தியர் சிலை. காந்தியைக் கடுமையாக விமர்சனம் செய்த, இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை ஆதரித்த வின்ஸ்டன் சர்ச்சிலின் சிலைக்கு அருகே காந்தியின் சிலை நிறுவப்பட்டது விநோதம்.


❖நேரம் தவறாமையை மகாத்மா கண்டிப்புடன் கடைபிடித்தார். அதற்காக அவர் தன் இடுப்பில் டாலர் கடிகாரம் ஒன்றைக் கட்டித் தொங்கவிட்டிருப்பார். காந்தி படுகொலை செய்யப்பட்ட 1948 ஜனவரி 30ம் தேதி அவர் படேலுடன் பேசிக்கொண்டிருந்ததால் பிரார்த்தனைக்கு 10 நிமிடம் தாமதமாகப் போனதற்காக காந்திஜி வருத்தம் அடைந்துள்ளார். அந்த நேரத்தில்தான் அவர் சுடப்பட்டார்.



❖ காந்தி 11 விரதங்களைக் கடைபிடிக்க வலியுறுத்தினார். அவரும் கடைபிடித்தார். அவர் கூறிய சத்தியம், அகிம்சை, பிரம்மச்சரியம், திருடாமை, உடைமை இன்மை, உடல் உழைப்பு, நாவடக்கம், அஞ்சாமை, தீண்டாமை ஒழிப்பு, சமய நல்லிணக்கம், சுதேசி என்ற 11 விரதங்களையும் கடைபிடிப்பதே காந்திய வாழ்வியல்.

❖மகாத்மாவின் உயரம், 165 செ.மீ. 1939ம் ஆண்டு அவரின் உடல் எடை, 46.7 கிலோவாக இருந்தது. இது அவரின் உயரத்திற்கு ஏற்ற எடையாக இல்லாமல் இருந்தது. அவரை மலேரியா உள்ளிட்ட கொடிய நோய்கள் தாக்கியிருந்தன. இருந்தும் அவர், பல நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார். இவ்வளவு குறைவான உடல் எடையுடன், பல நாட்கள் சாப்பிடாமல் உண்ணாவிரதம் இருந்தபோதிலும், அவர் சுறுசுறுப்பாகவே இருந்தார்.

❖ காந்திக்கு 'மகாத்மா' என்ற பட்டத்தை தாகூர் வழங்கினார். 'தேசப்பிதா' என்ற அடையாளத்தை நேதாஜி வழங்கினார். ●



# சுதேசித் தொழில்களை ஆதரிப்போம்!

ஒரு வெளிநாட்டு நிறுவனம் இந்தியா வந்து வியாபாரம் செய்தால், அதில் கிடைக்கும் லாபம் அந்த நாட்டுக்குப் போய்விடுகிறது. இதனால் நம் நாட்டில் பணப்புழக்கம் குறைகிறது. அந்நியச் செலாவணியையும் இழக்கிறோம். நம் தாய்நாட்டு நிறுவனத்தின் பொருளை நாம் வாங்கினால், சுதேசி நிறுவனங்களின் சேவையைப் பயன்படுத்தினால், நம் பணம் வெளியில் போகாது. நம் பாரம்பரியப் பொருட்களை, உடைகளைப் பயன்படுத்துவது நமக்குப் பெருமை தரும் விஷயமும் கூட!

இதை பிரிட்டிஷ் காலத்திலேயே உணர்ந்து, ஆங்கிலேயர்களின் தொழிலை வேரறுக்க முயன்றவர் வ.உ.சிதம்பரனார். 'கப்பலோட்டிய தமிழர்' என்று பெருமையுடன் அதனால்தான் அவரை அழைக்கிறோம்.

'நமது சுதேசத்தை அந்நிய நாட்டார் கைப்பற்றிக் கொள்ள ஏதுவாக இருந்ததும், நம் தேசத்து பொருட்களை எல்லாம் அந்நிய நாட்டான் கொண்டு போவதற்கு ஏதுவாக இருந்ததும், நமக்கு மிக்க லாபத்தை தரக்கூடிய கைத்தொழில் வியாபாரம் எல்லாம் அந்நிய நாடுகளுக்குப் போவதற்கு ஏதுவாக இருந்ததும், கப்பல் தொழிலை நம்மிடமிருந்து அவர்கள் கைப்பற்றிக் கொண்டதால்தான். அதை நாம் மீட்க வேண்டும்' என்று முழங்கினார் அவர்.

தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் பாரம்பரியமிக்க குடும்பத்தில் பிறந்தவர் சிதம்பரம். தாத்தா வள்ளியப்பன், அப்பா உலகநாதன் என பரம்பரையாக வழக்கறிஞர்கள். சிதம்பரமும் வழக்கறிஞர் தொழில் செய்தார்.

சுதந்திர தாகம் கொண்ட வ.உ.சி., எல்லா தொழில்களையும் தற்சார்பாக இந்தியர்கள் நடத்த வேண்டும் என்ற இலக்கின் துவக்கமாகத்தான் கப்பல் நிறுவனத்தைப் பார்த்தார். ''நாம் பல வருஷங்களாக இழந்துவிட்ட தொழில்களை எல்லாம் ஒவ்வொன்றாக மெல்ல மெல்ல கைக்கொள்ள வேண்டும்'' என்று அறைகூவல் விடுத்தார். அந்நியத் துணி எதிர்ப்பு, அந்நியக் கப்பல் எதிர்ப்பு என போராட்டங்களை ஒருங்கிணைத்தார்.

ஆங்கிலேயர்கள் நடத்தி வந்த 'பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நேவிகேஷன்' என்ற கப்பல் நிறுவனத்துக்குப் போட்டியாக, 1906 அக்டோபர் 16ல் 'சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி' பதிவு செய்யப்பட்டது. இந்த நிறுவனத்துக்கு மும்பையிலிருந்து ஒரு கப்பலை குத்தகைக்கு எடுத்து வந்தார்கள். ஆனால், கப்பல் கொடுத்த மும்பை நிறுவனத்தை வெள்ளையர்கள் மிரட்டிப் பின்வாங்க வைத்தனர். அதன்பின் இலங்கை சென்று கொழும்புவில் வாடகைக் கப்பலை வாங்கி வந்து இயக்கினார். ஆனால், சொந்த கப்பல்கள் இல்லாமல் வணிகத்தைத் தொடர இயலாது என்பதை தெரிந்துகொண்டார்.




பல போராட்டங்களைத் தாண்டி எஸ்.எஸ்.காலியோ என்ற நீராவி இயந்திரம் பொருத்தப்பட்ட கப்பலை வாங்கினார். 1,300 பேர் பயணம் செய்ய முடிகிற கப்பல் அது. கப்பலின் முகப்பில் 'வந்தே மாதரம்' என்று எழுதப்பட்ட கொடியைக் கட்டி அதைக் கடலில் இறக்கிவிட்டார் வ.உ.சி. அவரது செயலாளர் வேதமூர்த்தி பிரான்ஸ் சென்று எஸ்.எஸ்.லாவோ என்ற கப்பலை வாங்கி வந்தார். இரண்டு கப்பல்களும் தூத்துக்குடிக்கும் கொழும்புவுக்கும் இடையே பயணம் செய்தன. மக்கள் அனைவரும் சுதேசி கப்பலில் பயணிப்பதை மிகவும் விரும்பினர். துவக்க விழாவில் வ.உ.சி., ''இந்தக் கப்பல் நிறுவனம் சுதந்திர உணர்வை அனைவருக்கும் ஊட்டும். வெள்ளையனை நாட்டை விட்டு மூட்டை முடிச்சுடன் ஓட வைக்கும்''என்றார். சுப்ரமணிய சிவா குறுக்கிட்டு, ''மூட்டை முடிச்சை இங்கே விட்டுச் செல்லட்டும். அவை நம்மிடமிருந்து சுரண்டியவைதான்'' என்று கர்ஜித்தார்.

சுதேசி கப்பல்களின் பயணத்தால் ஆங்கிலேய கப்பல் நிறுவனம் பாதிக்கப்பட்டது. வெள்ளை அதிகாரிகள் அதிர்ச்சியடைந்தனர். தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையிலான 5 ரூபாய் பயணக்கட்டணத்தைச் பாதியாகக் குறைத்தனர். வ.உ.சி.யும் அதேபோல குறைத்தார். பின்னர் அதையும் பாதியாகக் குறைத்த வெள்ளையர்கள், கடைசியில் இலவசப் பயணம் என்று அறிவித்தார்கள். பிறகு இலவசப் பயணத்தோடு 'ஆளுக்கொரு குடையும் இலவசம்' என்றார்கள். பிரிட்டிஷ் கப்பல் நிறுவனத்துக்கு ஆங்கிலய அரசு பல வழிகளில் உதவி செய்தது. சுதேசி கப்பல்களின் பயணிகளை, அரசு அதிகாரிகள் மூலம் பல தொந்தரவுகள் செய்தது.

''சுதேசிக் கப்பலின் வெற்றி, உங்களின் வெற்றி. நம் நாட்டின் வெற்றி. வெள்ளையனிடம் ஏமாந்து விடாதீர்கள். சுதேசிக் கப்பல் இல்லாவிட்டால் மீண்டும் இஷ்டம் போல கட்டணம் வசூலிக்கத் தயங்க மாட்டார்கள்'' என உணர்வை ஊட்டி, கப்பல் கம்பெனியை வ.உ.சி. விடாமல் நடத்தினார். தேசப்பற்று கொண்ட மக்கள், சுதேசிக் கப்பல்களையே ஆதரித்தனர்.

கப்பல் நிறுவனத்தைத் தொடர்ந்து சுதேசி நூல் ஆலைகள் உருவாக்கும் எண்ணமும் அவருக்கு இருந்தது. இவை அனைத்தும் பிரிட்டிஷாரை வெளியேற்றுவதற்கான வழிகள் என்றும் வ.உ.சி திட்டமிட்டிருந்தார். ''இந்தியர்களாகிய நாம் பிரிட்டிஷ் துணி, சர்க்கரை, எனாமல் பாத்திரம் முதலிய பொருட்களை வாங்காமல் புறக்கணித்தால், ஆங்கிலேயர்கள் தாமாகவே இந்தியாவிலிருந்து வெளியேறி விடுவார்கள்'' என்று ஒரு பொதுக்கூட்டத்தில் வ.உ.சி பேசினார்.

பிரிட்டிஷ் அரசின் தடையை மீறி பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டதற்காக வ.உ.சி.யைக் கைது செய்கிறது போலீஸ். அவர்மீது தேசத்துரோக வழக்குப் பதிவு செய்யப்படுகிறது. அவருக்கு இரட்டை ஆயுள் தண்டனையாக 40 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. சுதந்திரப் போராட்டத்தை எந்த வன்முறையும் இல்லாமல் நடத்திய தலைவர்களில் அதிக தண்டனை பெற்றவர் அவர்தான். பிரிட்டிஷ்காரர்களின் தொழிலுக்குப் போட்டியாக சுதேசி தொழில்களை வளர்க்க முயன்றதால் எழுந்த கோபத்தின் விளைவு அது.



வெண்மை

VENMAII

தமிழ் மாத இதழ்

மலர் 6 இதழ் 3

செப்டம்பர் 2021

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

**உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:

தரு மீடியா (பி) லிட்.,

10/55, ராஜ் தெரு,

மேற்கு மாம்பலம்,

சென்னை - 600 033

email: contacttharu@gmail.com

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.

Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137



கோவை சிறையில் அடைக்கப்பட்டு அவர் பல துன்பங்களை அனுபவிக்கிறார். மாடுகள் கூட இழுப்பதற்கு சிரமப்படும் செக்கை சிறையில் இழுத்த அவரது வரலாறெல்லாம் சுதந்திரத்தின் அருமையை உணராத தலைமுறைக்கு சொல்லிக் கொடுக்கவேண்டிய பாடம். சிறையில் அவருக்கு உடல்நலமில்லாமல் போக, தண்டனை ஆறு ஆண்டுகளாகக் குறைக்கப்படுகின்றது. ஆனால் 40 ஆண்டுகளில் ஒரு சிறைக் கைதி அனுபவிக்கும் வலியை விட இரு மடங்கு வலியை அந்த ஆறு ஆண்டுகளில் அவர் அனுபவிக்கிறார்.


வ.உ.சி.யை சிறைக்கு அனுப்பிய பிறகு சுதேசி கப்பல் நிறுவனத்தை மூடுவது வெள்ளையர்களுக்கு சுலபமாக இருந்தது. பிரிட்டிஷ் கப்பல் மீது சுதேசி கப்பல் மோதியது என்று வழக்கு போட்டனர். சுதேசி கப்பல் நிறுவன நிர்வாகிகளுக்கு நெருக்கடி கொடுத்தனர். வ.உ.சி நிலையைப் பார்த்துவிட்டு, பலரும் ராஜினாமா செய்துவிட்டுப் போனார்கள். கடைசியில் நிறுவனமே திவாலாகும் நிலைக்குச் சென்றது. இரண்டு கப்பலையும் விற்று விட்டனர். இதில் வேதனை என்னவென்றால், எஸ்.எஸ்.காலியா கப்பலை வெள்ளையருக்கே விற்று விட்டதுதான். இதை அறிந்து வ.உ.சி மிகுந்த வேதனை அடைந்தார்.

சுதேசித் தொழில்களை மீண்டும் நம் மண்ணில் தழைக்கச் செய்ய முயன்ற வ.உ.சி., தன் இறுதிக்காலத்தில் மகிழ்ச்சியாக இல்லை. பிரிட்டிஷ் அரசு அவரின் வழக்கறிஞர் உரிமத்தை ரத்து செய்தது. விடுதலைக்குப் பிறகு அவர் தன் சொந்த மாவட்டமான திருநெல்வேலிக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டது. பிரிட்டிஷ் தேசமே நடுங்கும் அளவுக்கு சுதேசி தொழில்களை உருவாக்கிப் பெயர் பெற்ற அந்த தேசபக்தர், விடுதலை பெற்று சிறையிலிருந்து வெளியே வந்தபோது அவரை வரவேற்க விரல்விட்டு எண்ணக்கூடிய நபர்களே போயிருந்தார்கள்.

அவர் வாழ்வில் மோசமான வறுமையும் சோகமும் மட்டுமே மிஞ்சியது. குடும்பத்தைக் காப்பாற்ற சென்னையில் மளிகைக்கடை நடத்தினார், மண்ணெண்ணெய் விற்றார். வெள்ளையர்களை எதிர்த்துக் கப்பல் நிறுவனத்தை நடத்திய வ.உ.சிக்கு இந்த வணிகம் செய்யத் தெரியவில்லை. இந்த இக்கட்டான சூழலில் வ.உ.சிக்கு வழக்கறிஞர் உரிமத்தை மீட்டுத் தந்தவர் வெள்ளைக்கார நீதிபதி வாலஸ். அவரின் உதவிக்கு நன்றிக்கடனாகத் தனது மகனுக்கு ‘வாலேஸ்வரன்’ என்று பெயரிட்டார் வ.உ.சி.

தன் இறுதிக்காலத்தில் கோவில்பட்டி சென்று வழக்கறிஞர் தொழில் செய்து வாழ்ந்தாலும், மக்கள் அவரைக் கைவிட்டாலும், சுதந்திர தாகத்தை அவர் எப்போதும் கைவிடவில்லை.

வ.உ.சி போன்றவர்களின் தியாகத்துக்கு மதிப்பு கொடுப்போம். ‘மேக் இன் இந்தியா’ போன்ற முயற்சிகளை ஆதரிப்போம். சுதேசித் தயாரிப்புகளையே வாங்குவோம். நம் பண்பாட்டின் அடையாளமான உடைகளையே அணிவோம்.’ ●






WOVEN FABRIC

RAMRAJ ©

# face mask

**WASHABLE & REUSABLE**

MADE IN INDIA

3 LAYER | FIT TO ALL | ANTI DUST | PERFECT FIT | ANTI BACTERIAL | ANTI POLLUTION
UNISEX DESIGN | SOFT ELASTIC EARLOOP | SOFT TOUCH CARBON FINISH FABRIC


**Special concession for all corporate order.**

**Contact : 73730 45147**

**shop online @ www.ramrajcotton.in**



RAMRAJ ©
LittleStars ®
CULTURE CLUB
KIDS MATCHING DHOTI & SHIRT


SHIRT CRAFTED
FOR ALL SEASON
EMBRACE THE BREEZY HAPPINESS THIS FESTIVE SEASON WITH WHITE AND COLOUR LINEN PARK FABRIC , SHIRTS & TROUSERS
Available in 50+ Colours as plain and printed.
Crafted for the comfort
LINEN PARK™
LINEN DHOTIS • SHIRTS • FABRICS
A Premium Product from
RAMRAJ©
Available at Company Showrooms & All leading Textile Shops


RAMRAJ
TOUCH OF HERITAGE
Srimad Bhagavad Gita Bhasya
RAMRAJ
ACHARYA
PANCHAKACHAM DHOTIS

# காந்தியை நேசித்த சுதேசி நகரம்!

இன்று உலகத்துக்கே ஆடை நெய்து கொடுக்கும் நகரமாக விளங்குகிறது திருப்பூர். காட்டன் உடைகள், பின்னலாடைகள் மற்றும் ஆயத்த ஆடைகள் உருவாக்கி ஏற்றுமதி செய்து அதிக அந்நியச் செலாவணியை ஈட்டுவதால் ‘டாலர் சிட்டி’ என்று பெயர் பெற்றிருக்கிறது. தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து பிழைப்பு தேடி வருவோருக்கு வாழ்வும் வளமும் தருவது திருப்பூர்.



ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் தலைமையகமாக விளங்கும் திருப்பூரை ‘கதர் ஆடைகளின் தலைநகரம்’ என்று மகாத்மா காந்தி கொண்டாடி இருக்கிறார். மகாத்மாவின் சொல் கேட்டு, சுதேசி கதர் ஆடைகளை உடுத்தி நம் நெசவாளர்களின் வாழ்வை மேம்படுத்தியது திருப்பூர் மண்.

மகாத்மா தன் வாழ்நாளில் ஐந்து முறை திருப்பூர் வந்திருக்கிறார். 1921ம் ஆண்டு முதல்முறை வந்தபோதே அவர் வியந்துபோனார். திருப்பூர் ரயில் நிலையத்தில் காந்தி வந்து இறங்கியபோது, 500க்கும் மேற்பட்ட தமிழ்ப்பெண்கள் கதராடை அணிந்து ராட்டையில் நூல் நூற்றபடி வரவேற்பு அளித்தனர். அந்தக் காட்சி அழியாச் சித்திரமாக அவர் மனதில் பதிந்துவிட்டது.

1925ம் ஆண்டு மறுபடியும் அவர் வந்தபோதும், கதராடை அணிந்த தமிழ் மக்கள் வரவேற்பு தந்தனர். அப்போது நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய காந்தி, ‘கதராடைகளின் தலைநகரம் திருப்பூர்’ என்று புகழ்ந்தார். அந்த அளவுக்கு பருத்தி ஆடைகள் உற்பத்தியில் முன்னோடியாக இருந்தது திருப்பூர். வேட்டி, சட்டை என காட்டன் உடைகளை விரும்பி உடுத்துகிறவர்களும் அதிகம். இப்போதும் அந்த இயல்பைத் தொலைத்துவிடவில்லை திருப்பூர்.

அதன்பின் 1927ம் ஆண்டு காந்தி திருப்பூரில் வந்து தங்கியிருந்தபோதுதான், அன்றைய பிரிட்டிஷ் ஆட்சியாளராக இருந்த இர்வின் பிரபு அவரை சமாதானப் பேச்சுக்கு அழைத்தார். காந்தி இர்வின் ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தியாவில் தற்காலிக அமைதி ஏற்பட்டது.

நெசவாளர் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ‘இந்திய நூற்போர் சங்கம்’ என்ற நிறுவனத்தை ஆரம்பித்தார் காந்தி. தமிழகத்தில் அந்த சங்கத்தின் முதல் கிளை, 1936ம் ஆண்டு திருப்பூரில்தான் தொடங்கப்பட்டது. அதற்கு அடிக்கல் நாட்டியவர் காந்தி. இப்போது அந்தப் பகுதியே திருப்பூரின் காந்தி நகராக இருக்கிறது. இங்குள்ள அகில இந்திய சேவா சங்கத்திலும், வீரபாண்டி பகுதியில் உள்ள கதர் கிராமத் தொழில் சங்கத்திலும் மகாத்மாவின் அஸ்தி பாதுகாப்பாக வைத்து வழிபடப்படுகிறது.

‘‘இந்தியாவின் எந்த மூலைக்குச் சென்றாலும், என் கூட்டங்களுக்குக் கதராடை அணிந்தவர்கள் மிகவும் குறைவாகவே வருவதை கவனித்துள்ளேன். ஆனால், திருப்பூர் நகரில் நடைபெறும் என் பொதுக்கூட்டங்களுக்குக் கதராடை அணிந்த ஆண்களும் பெண்களும் அதிகமாக வருவதைப் பார்த்திருக்கிறேன். எனக்கு இது பெரும் நம்பிக்கையை அளித்தது’’ என்று மகாத்மா பெருமையுடன் குறிப்பிட்டார்.

அந்த நம்பிக்கையை இன்றும் பாதுகாக்கிறது திருப்பூர். சுதேசி தயாரிப்புகளான வேட்டிகளையும் காட்டன் உடைகளையும் திருப்பூரிலிருந்து இந்தியா முழுக்கக்கொண்டு சென்று நம் பாரம்பரியத்தைப் பெருமைப்படுத்துகிறது ராம்ராஜ் காட்டன். அதன் மூலம் நெசவாளர்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்துகிறது. ●

# உங்களைச் சார்ந்திருப்பது எப்படி?

**ஒவ்வொரு விஷயத்துக்கும் அடுத்தவர் உதவியை எதிர்பார்க்கும் ஒரு வாழ்க்கையில், திடீரென அந்த உதவி கிடைக்காமல் போனால் தடுமாறி நிற்பீர்கள். உங்கள் வளர்ச்சிக்கும் செயல்களுக்கும் எப்போதும் நீங்கள் காரணமாக இல்லாமல், இன்னொருவர் காரணமாக இருப்பார். ஆனால், நீங்கள் உங்களைச் சார்ந்திருக்கும்போது இதெல்லாம் மாறும்.**

❖ உங்கள் பிரச்னைகளை நீங்களே தீர்ப்பீர்கள். உங்கள் முடிவுகளை நீங்களே எடுப்பீர்கள். இது பல வகைகளிலும் உங்களுக்கு உதவும். குறிப்பாக முதுமையில் யாரையும் சார்ந்திருக்காமல் வாழ வேண்டிய நிலை ஏற்படும். அப்போது, மற்றவர்கள் போல நீங்கள் சிரமப்பட மாட்டீர்கள்.

❖ வாழ்வில் மகிழ்ச்சி நிலைக்கும். உங்கள் மகிழ்ச்சிக்கு நீங்களே முழு பொறுப்பாகவும் காரணமாகவும் இருப்பீர்கள். உங்களின் இயல்பு குறித்தும், வளர்ச்சி குறித்தும் ஒவ்வொரு கணத்திலும் நினைத்து மகிழ்வீர்கள்.

❖ சுயமாக முயற்சி செய்து எதையும் கற்றுக்கொள்வீர்கள். அது உங்களின் வளர்ச்சிக்குக் காரணமாக அமையும்.

❖ ஒரு விஷயத்தில் உங்களால் ஓரளவுக்குத்தான் முன்னேற்றம் அடைய முடிகிறதா? 'எனக்கு இதுதான் சாத்தியம்' என்று ஏற்றுக்கொள்வீர்கள். உங்களுக்கு சரிவராத விஷயங்களை விட்டுவிட்டு, சரியாக வரும் விஷயங்களை நோக்கி மாறுவீர்கள்.

❖ வேலை, தொழில், வாழ்க்கை என்று எதைப் பற்றியும் உங்களுக்கு ஒரு கருத்து இருக்கும். அது உங்களை வழிநடத்தும்.

❖ வாழ்வில் எவ்வளவோ மோசமான சூழ்நிலையை சந்தித்தாலும் தடுமாறிப் போக மாட்டீர்கள். அந்த சூழலைக் கட்டுப்படுத்த வேறு யாரோ வருவார்கள் என்று காத்திருக்க மாட்டீர்கள். அந்த நேரத்தில் என்ன செய்ய வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும்.

❖ சில நேரங்களில் நீங்கள் தனியாக இருக்க நேரிடும்; சில நேரங்களில் மற்றவர்களுடன் இருக்க வேண்டியிருக்கும். எல்லா சூழல்களையும் ஒரே மாதிரி பார்க்கக் கற்றுக்கொள்வீர்கள். அடுத்தவர்களின் தவறான கருத்துகளில், உங்களை ஆதிக்கம் செலுத்த விடமாட்டீர்கள்.

❖ எல்லா விஷயங்களுக்கும் உங்களையே நீங்கள் சார்ந்திருக்கும்போது, 'எது சரி, எது தவறு' என்று கண்டறியும் பக்குவம் உங்களுக்கு வந்துவிடும். வேறு யாரோ வந்து உங்களை சரியான பாதைக்கு இழுத்துச் செல்ல வேண்டியிருக்காது. செல்லும் பாதை தவறானது என உணர்ந்தால், நீங்களே திரும்பி வந்துவிடுவீர்கள்.

❖ வாழ்க்கையின் சவால்களை வேறு யாரோ வந்து உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இருக்காது. நீங்களே உணர்ந்து, அதற்கு ஏற்றபடி திட்டமிடுவீர்கள்.

❖தேவையற்ற எதிர்பார்ப்புகள் வைக்க மாட்டீர்கள். அதனால் ஏமாற்றமும் உங்களுக்கு ஏற்படாது. எது அமைதியான சூழலில் நடக்கும், எப்போது கொந்தளிப்பான சூழல் வரும் என எல்லாமும் உங்களுக்குத் தெரியும். சூழ்நிலைக்கு ஏற்றபடி உங்களை மாற்றிக்கொள்வீர்கள்.

❖ என்னதான் சுயசார்புடன் வாழ்ந்தாலும், சில நேரங்களில் தடுமாற்றம் வரும். அப்போது நெருங்கிய நண்பர் அல்லது அக்கறையான உறவினரிடம் ஆலோசனை கேட்பீர்கள். ●





# சுயசார்பின் சிறப்புகள்!



'பூமி தட்டையாக இருக்கிறது' என காலம் காலமாக சமூகம் முடிவு செய்து வைத்திருந்தது. சுயசார்பு உள்ள ஒரு அறிஞர்தான், 'உலகம் உருண்டை' என்று கண்டுபிடித்தார். 'இது இப்படித்தான் இருக்கும்' என சில விஷயங்களை எல்லோரும் முடிவு செய்து வைத்திருப்பார்கள். இதுபோன்ற முடிவுகளே தனிமனித வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்துக்கும் தடையாக இருக்கின்றன. சுய சார்புள்ள, தன்னை நம்புகிற, தனித்தன்மையுடன் இயங்குகிற ஒருவரே இந்தக் கட்டுப்பாடுகளைத் தாண்டி உயர முடியும். அந்த சிறப்புகள்:

❖ சுயசார்பு உஎன்பது எல்லாவற்றையும் நாம் மட்டுமே தனியாகச் செய்வது என்பதல்ல. பணம், உழைப்பு என எல்லாவற்றுக்கும் யாரையும் சார்ந்திருக்காமல் தனியாக இருப்பது என்பதல்ல. எல்லா பிரச்னைகளையும் நாம் மட்டுமே தனியாக எதிர்கொள்வது அல்ல. எல்லா சூழல்களிலும் தனித்துவமாக செயல்படுவதும், முடிந்தவரை சொந்தக்காலில் நின்று சமாளிப்பதுமே ஆகும்.

❖ சுயமாக சிந்திப்பது என்பது, சுய சார்பின் முக்கியமான ஓர் அம்சம். பல நேரங்களில் அடுத்தவர்களின் வழிகாட்டுதல்கள் நமக்கு உதவி செய்யலாம். ஆனால், சுயமாக சிந்திக்கும்போது, நம் உள்ளுணர்வு காட்டும் வழியில் பயணம் செய்ய முடியும். அது பெரும்பாலும் சிறந்த வழியாகவே இருக்கும்.

❖ சுயசார்புடன் இயங்கும் மனிதர்கள், சிறந்த விஷயங்களையே நம்புகிறார்கள். தாங்கள் நம்பும் ஒரு விஷயம், தங்களுக்கு நன்மைகளையே தரும் என்று தீர்மானிக்கிறார்கள். வேலை, தொழில், வியாபாரம், வாழ்க்கை என்று எதிலும் தங்கள் நம்பிக்கைகளின் பாதையில் செல்கிறார்கள். வேறு பலருக்கும் கிடைக்காத முன்னேற்றம் இவர்களுக்கு இதனால் கிடைக்கிறது.

❖ 'நமக்கு எது சிறப்பாக வருகிறது. எந்தத் தொழில் அல்லது வேலையில் எனக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது' என்பதை சுயசார்பு மனிதர்கள் தெளிவாக உணர்கிறார்கள். தங்கள் திறமைகளை மெருகேற்றிக்கொண்டு, அந்தத் துறையில் முன்னேற்றம் காண்கிறார்கள்.

❖ சுயசார்பு வாழ்க்கை என்றால், நம் மனம் சொல்லும் பாதையில் செல்வதுதான். அதற்காக, இந்த சமூகத்திடமிருந்தும், நண்பர்கள் மற்றும் உறவுகளிடமிருந்தும் நம்மைத் துண்டித்துக்கொள்ள வேண்டும் என்பதில்லை. எல்லோரிடமும் இணக்கமாகப் பழகுவது நம்மை வளமாக்கும். ஆனால், அவர்களின் தவறான எண்ணங்கள் நம் வேலை அல்லது தொழிலை ஆதிக்கம் செலுத்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

❖ உங்களின் பலம், பலவீனம் ஆகியவற்றை உணர்ந்துகொள்ளுங்கள். பலவீனங்களை சரி செய்யுங்கள். பலங்களைப் பயன்படுத்துங்கள். உங்களுக்கு நீங்களே சிறந்த நண்பராக இருங்கள். உங்கள் சாதனைகளில் பெருமை அடையுங்கள்.

❖ விமர்சனங்கள் வரும்போது தலைகுனியவும் வேண்டியதில்லை; பாராட்டுகள் கிடைத்தால் கர்வம் அடையவும் வேண்டியதில்லை. உங்களின் தன்னம்பிக்கை எந்தத் தருணத்திலும் துளியும் குறையாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

❖ மற்றவர்கள் சில விஷயங்களை மதிக்கலாம்; பல விஷயங்களை அலட்சியம் செய்யலாம். அவர்களைப் போல நீங்கள் இருக்காதீர்கள். சின்னச்சின்ன விஷயங்களையும் மதிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். பெரிய பெரிய வெற்றிகள் உங்களைத் தேடி வரும். ●



# சுயசார்பு வாழ்க்கை வாழுங்கள்!

**யாரோ உருவாக்கிய சாலைகளில் பயணம் செய்கிறோம். யார் யாரோ கண்டுபிடித்த பொருட்களைப் பயன்படுத்துகிறோம். தூங்கி எழுந்ததும் பல் துலக்கப் பயன்படுத்தும் பிரஷ் முதல், இரவு தூங்கப் போகும் படுக்கை வரை நாம் பயன்படுத்தும் ஒவ்வொன்றும், பெயர் தெரியாத யாரோ உருவாக்கியவை. 'இதில் எங்கே சுயசார்பு வாழ்க்கை வாழ்வது' என்ற கேள்வி உங்களுக்கு எழலாம்.**

சுயசார்பு வாழ்க்கை என்பது இதையெல்லாம் தாண்டிய விஷயம். நம் பணம் எப்படிச் செலவாகிறது, நாம் உண்ணும் உணவு எங்கிருந்து வருகிறது, நாம் பயன்படுத்திய பல பொருட்களைத் தூக்கி எறிகிறோமா, அல்லது மறுசுழற்சி செய்து பயன்படுத்துகிறோமா? இந்த அத்தனைக் கேள்விகளுக்குமான பதில்களில் இருக்கிறது நம் சுயசார்பு. கீழ்க்கண்ட விஷயங்களில் நம்மால் செய்ய முடிகிற எதையும் செய்யலாம்.

❖ சின்னதாகத் தோட்டம் இருந்தாலும், மொட்டை மாடி இருந்தாலும், நமக்குத் தேவையான சில உணவுகளை நாமே விளைவிக்கலாம். கீரைகள், காய்கறிகள் என அடிப்படையான சில உணவுகள் நம் தோட்டத்திலிருந்து கிடைத்தால்கூட போதும். பூச்சிமருந்துகளோ, செயற்கை உரங்களோ கலக்காத ஆரோக்கிய உணவு நமக்குக் கிடைக்கும். தோட்டத்தில் உடல் உழைப்பு கொடுப்பதால், உடலும் வலுவாகும்.

❖ பழங்களோ, காய்கறிகளோ சாப்பிடும்போது, பலரும் விதைகளைக் குப்பையில்தான் தூக்கிப் போடுகிறோம். விதைகள் குப்பைகள் அல்ல! வெள்ளரி மற்றும் பூசணி விதைகளை உலரவைத்து உணவாக சாப்பிடலாம். மற்ற பல விதைகளைத் தோட்டத்தில் விதைக்கலாம். வெந்தயமோ, கொத்தமல்லியோ மண்ணில் தூவி கீரைகளை விளைவிக்கலாம். எந்த விதைக்குள்ளும் உயிர் இருக்கிறது.

❖ காய்கறிகளை சுத்தம் செய்யும்போது, வீணாகும் எதையும் குப்பையில் போடக்கூடாது. வீட்டுத் தோட்டம், மாடித்தோட்டம் போட்டிருப்பவர்கள், இந்தக் குப்பைகளை மக்கச் செய்து உரமாக்குவார்கள். பழத் தோல்கள் பலவும் வெயிலில் காயவைத்து அரைத்தால், அழகுசாதனப் பொருளாகவும் மருந்தாகவும் மாறுகின்றன.

❖ தோட்டத்து முருங்கை மரத்தில் நிறைய காய்கள் காய்த்துத் தொங்கினால், அக்கம்பக்க வீடுகளுக்குக் கொடுக்கலாம். மற்றவர்களுடன் நெருக்கம் பிறக்கும். அவர்களும் அவர்கள் தோட்டத்தில் விளைந்த ஏதோ ஒன்றைக் கொடுப்பார்கள். இப்படி மற்றவர்களையும் சுயசார்புடன் வாழ்வதற்கு நீங்கள் தூண்டுகிறீர்கள்.

❖ 'எதுவும் வீண் இல்லை' என்ற நினைப்பே சுயசார்பின் அடிப்படை. காலையில் சுட்ட இட்லி மீந்துபோனால், இரவு அது உப்புமாவாக மாற வேண்டும். மதியம் சமைத்த உருளைக்கிழங்கு பொரியல் மீந்துபோனால், அது இரவு மசால் தோசைக்குள் நுழைய வேண்டும். இப்படிப்பட்ட குடும்பத்தில் குப்பைகள் குறையும்.



❖ வீட்டில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு இருக்க வேண்டும். மொட்டை மாடியில் விழும் மழைத்தண்ணீர் சுத்திகரிக்கப்பட்டு பூமிக்குள்போனால், வீட்டில் இருக்கும் கிணறு எப்போதும் வற்றாது. தண்ணீரும் சுவையாக இருக்கும்.

❖ சாப்பிடும் பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றை கவனமாகத் தேர்வு செய்ய வேண்டும். ஒவ்வொரு பகுதியில் வாழும் மக்களுக்கு எது ஆரோக்கியமோ, அதுவே அந்த மண்ணில் விளைகிறது. ஒரு பருவத்தில் எதைச் சாப்பிடுவது உடலுக்கு ஊட்டம் தருமோ, அதுவே அந்தப் பருவத்தில் விளைகிறது. எனவே, நம் மண்ணில் ஒவ்வொரு பருவத்திலும் விளையும் பழங்கள், காய்கறிகளையே வாங்குங்கள்.

❖உடை விஷயத்திலும் இதே கவனம் வேண்டும். வருடத்தின் பெரும்பாலான நாட்கள் வெயில் கொளுத்தும் நம் நாட்டுக்கு பருத்தி ஆடைகளே ஆரோக்கியமானவை. வேட்டியும் காட்டன் சட்டையும் அதனாலேயே நம் பாரம்பரிய உடைகள் ஆகின. பருத்தி ஆடைகளை உடுத்துங்கள். தரமான தயாரிப்புகள் நீண்ட காலம் உழைக்கும். அடிக்கடி உடைக்கு செலவு செய்ய வேண்டிய தேவை இருக்காது.

❖வீட்டின் மின் தேவைகளில் கவனமாக இருக்கவும். சாதாரண பல்புகளைவிட குறைந்த மின்சக்தியில் இயங்கும் எல்.இ.டி பல்புகள் நல்லவை. தேவையில்லாத இடங்களில் மின்விசிறி ஓடுவது, நேரம் கடந்தும் ஏ.சி இயங்குவது போன்ற தவறுகளைக் குறைத்தாலே, மின் கட்டணம் குறையும். ஹேர் ட்ரையர் பயன்படுத்துவதற்கு பதிலாக டவலால் தலை துடைத்தால் மின்சாரம் மிச்சமாகும். இயன்றவர்கள், மொட்டை மாடியில் சூரியசக்தி மின்சாரம் தயாரிக்கவும் செய்யலாம். மின்வெட்டு போன்ற பிரச்னைகள் அதன்பின் எப்போதும் வராது.

❖ வாஷிங் மெஷினை தினமும் இயக்க வேண்டும் என்பதற்காக குறைந்த துணிகளைப் போட்டு இயக்காதீர்கள். தண்ணீரும் மின்சாரமும் வீணாகும். துணி சேர்ந்ததும் துவைக்கலாம். அதிக அழுக்கில்லாத துணிகள் என்றால், கையால்கூட துவைக்கலாம்.

❖ தேவைக்கும் ஆடம்பரத்துக்குமான வித்தியாசத்தை உணருங்கள். இருசக்கர வாகனம் இல்லை என்றால் ஆபீஸ் போக முடியாது என்ற சூழலில், ஒரு வாகனம் வாங்குவது அவசியம். மூன்று பேர் இருக்கும் வீட்டுக்கு ஐந்து வாகனங்கள் வாங்கி வைப்பது ஆடம்பரம்.

❖ பழுதடைந்த எல்லாமே குப்பை என நினைக்காதீர்கள். இயன்றவரை பொருட்களை மறுசுழற்சி செய்து பயன்படுத்துங்கள். சட்டைகளில் பட்டன் தைப்பது, குழாய் ரிப்பேர், வீட்டில் சின்னச்சின்ன பராமரிப்பு வேலைகள் செய்வது என எல்லாவற்றையும் கற்றுக்கொள்ளுங்கள்.





❖ கடன் இல்லாமல் வாழக் கற்றுக்கொள்ளுங்கள். வீடு, வாகனம் என அவசியத் தேவைகளுக்கு மட்டுமே கடன் வாங்குங்கள். பல இடங்களில் விசாரித்து, குறைந்த வட்டியில் இருக்கும் கடனை வாங்குங்கள். கடன் இல்லாதபோது, உங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை சேமிக்க முடியும். முதலீடு செய்ய முடியும். உங்களுக்குக் கூடுதலாக இன்னொரு வருமானம் வரும்.

❖ 'மினிமலிசம்' என்று ஒரு வார்த்தை உண்டு. வீடு முழுக்க ஃபர்னீச்சர்களை அடைத்து வைத்துவிட்டு, அதற்கு இடையே கிடைக்கும் கொஞ்சமே கொஞ்சம் இடத்தில் வாழ்வது வாழ்க்கை அல்ல. வீடு முழுக்க நிறைந்திருக்கும் பொருட்கள் ஒருவருக்குக் கௌரவத்தையும் அந்தஸ்தையும் தருவதில்லை. ஒருவரின் வாழ்க்கைமுறையே அவருக்கு மதிப்பு தருகிறது. குறைந்தபட்ச தேவைகளுக்கான பொருட்களை மட்டுமே வைத்துக்கொண்டு வாழ்வதே சுயசார்பு வாழ்க்கை. ●

# சுயசார்பு வாழ்க்கை மொழிகள்!

எந்தக் கூண்டிலும் சிக்கிக்கொள்ளாத பறவையாக இருங்கள். சுதந்திர வாழ்வே சுயசார்புள்ள வாழ்வு.

நீங்கள் வாழ நினைக்கும் ஒரு வாழ்வை துணிச்சலுடன் வாழுங்கள். அப்போதுதான் உங்கள் கனவுகள் நிஜமாகும்.

எதையும் எவரிடமும் கேட்காமல் இருப்பதும், எதையும் எவரிடமும் எதிர்பார்க்காமல் இருப்பதும், எதையும் சார்ந்து இருக்காததுமே சுதந்திர வாழ்க்கை.

அடுத்தவர்களின் கருத்துகள் உங்களை ஆதிக்கம் செலுத்த விடாதீர்கள். எப்போதும் உங்கள் உள்ளுணர்வு சொல்வதைக் கேளுங்கள்.

யாரோ உருவாக்கிய விதிகளை விட, தாங்கள் வகுத்த வாழ்க்கை நியதிகளைப் பின்பற்றி வாழும் மனிதர்கள் சுயசார்புடன் இருக்கிறார்கள்.

நீங்கள் செய்ய பயப்படும் ஒரு விஷயத்தை துணிந்து செய்யுங்கள். அதுதான் உங்களுக்குள் மாற்றத்தை ஏற்படுத்தும்.

உங்களை வேறு ஏதோ ஒன்றாக மாற்றுவதற்கே இந்த உலகம் எப்போதும் நினைக்கும். அந்த முயற்சிகளைத் தாண்டி, நீங்கள் நீங்களாகவே வாழ்வதுதான் பெரிய சாதனை.

உங்களை நீங்கள் சார்ந்திருப்பது வரம், இன்னொருவரைச் சார்ந்திருப்பது சாபம்.

தன்னம்பிக்கைக்கும் நம்பிக்கைக்கும் வித்தியாசம் உண்டு. தன்னம்பிக்கை என்பது உங்களைச் சார்ந்து உழைப்பது. நம்பிக்கை என்பது, யாரையோ சார்ந்து இருப்பது.

எப்படி சிந்திப்பது என்று கற்றுக்கொள்ளும் குழந்தைகள் சுயசார்புடன் வளர்கின்றன. எதைச் சிந்திப்பது என்று கற்றுக் கொடுக்கப்படும் குழந்தைகள் யாரையாவது சார்ந்தே வாழ்கின்றன.

யாருக்கும் எளிதான வாழ்வும் வாய்ப்பதில்லை; சுலபமான இலக்குகளும் கிடைப்பதில்லை. அதனால் என்ன? சுயசார்புடன் கடினமாக உழைத்தால் எதுவும் இனிதே!

நீங்கள் என்னவாக ஆக நினைக்கிறீர்களோ, அப்படி உங்களால் ஆக முடியும். யாரோ போல ஆகாமல், உங்கள் இயல்பில் இருங்கள்.

நீங்கள் செய்யும் வேலை, தொழில் அல்லது வியாபாரமே உங்களுக்கு நிறைவும் சுயசார்பும் தருகிறது.

ஒரு விஷயம் சிறப்பாக செய்யப்பட வேண்டும் என நீங்கள் நினைத்தால், வேறு யாரையும் சார்ந்திருக்காமல் அதை நீங்களே செய்து முடியுங்கள்.

# சுயசார்பு வாழ்க்கை மொழிகள்!

உங்களுக்கு மிகச் சிறப்பாக வரும் வேலைகளை முழுமனதுடன் செய்யுங்கள். 'நான் இதற்காகப் பிறக்கவில்லை' என்று நினைக்கும் சின்னச்சின்ன செயல்களைச் செய்யாதீர்கள்.

யாரோ வகுத்த பாதைகளில் போகாதீர்கள். பாதைகளே இல்லாத காட்டில் புதுப்பாதைகளை உருவாக்குங்கள். உலகத்துக்கு உங்களின் அடையாளமாக அவற்றைக் காட்டுங்கள்.

அடுத்தவர் மீது பழி போட்டு, மற்றவர்களைக் குற்றம் சொல்லி, ஏதேதோ காரணங்கள் சொல்லி தங்கள் தவறுகளையும் தோல்விகளையும் நியாயப்படுத்தும் எவரும் சுயசார்பு பெறுவதில்லை; இலக்கிலும் ஜெயிப்பதில்லை.

உங்களின் இலக்கு என்ன என்பதை அறிய வேண்டுமென்றால், நீங்கள் உங்களைப் பற்றியே சிந்திக்க வேண்டும்.

யாருடனும் ஒப்பிடாமல், போட்டி போடாமல், உங்களின் இயல்பை நீங்கள் மதிக்கக் கற்றுக்கொண்டால், எல்லோரும் உங்களை மதிப்பார்கள்.

உங்களுக்கு உங்களைத் தவிர வேறு யாராலும் அமைதி தர முடியாது.

அடுத்தவர்களுக்காக அவர்களின் வேலைகளைச் செய்து செய்து, அவர்கள் உங்களைச் சார்ந்திருக்க வைக்காதீர்கள். தாங்களாகவே செய்யும் அளவுக்குக் கற்றுக்கொடுங்கள்.

எவ்வளவு பெரிய கூட்டத்திலும் தன் தனித்துவத்தை இழக்காத மனிதர்கள், எப்படிப்பட்ட தனிமையிலும் தன் உற்சாகத்தை இழக்காத மனிதர்கள், எப்போதும் எதற்காகவும் யாரையும் சார்ந்திருப்பதில்லை.

நீங்கள் என்னவாக ஆக வேண்டும் என நினைக்கிறீர்களோ, அதுவாகவே ஆகிறீர்கள். எப்போதும் உயர்வான இலக்குகளை நினையுங்கள்.

நாம் உண்மையாக வாழ்ந்தால், உண்மையான இலக்கை அடையலாம்.

நீங்கள் நம்புவதைவிட நீங்கள் துணிச்சலானவர்; நீங்கள் உணர்வதைவிட நீங்கள் வலிமையானவர்; நீங்கள் நினைப்பதைவிட நீங்கள் தைரியமானவர்; உங்களைச் சார்ந்திருங்கள்.

உங்கள் உள்ளுணர்வு சொல்வதை எப்போதும் கேளுங்கள். உண்மையில் நீங்கள் என்னவாக ஆக விரும்புகிறீர்கள் என்பது அதற்கு மட்டுமே தெரியும். மற்ற எல்லா விஷயங்களும் இரண்டாம்பட்சம்தான்.

மற்றவர்களுடன் இணைவதற்கான பாலங்களை உருவாக்கத் தெரிந்திருந்தால் போதும்; தவறானவர்களின் உறவைத் தடுக்க பாலங்களை எரிப்பது பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம்.

பாரம்பரியமும் பழம் பெருமைகளுமே சிலரை சுயசார்புடன் வாழவிடாமல் சிறைப்படுத்துகிறது.

# இந்தியர்களின் இணையற்ற கண்டுபிடிப்புகள்

**நோபல் பரிசு போன்ற அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துக்கான பரிசு பெறுபவர்கள் விவரங்கள் வெளியாகும்போதெல்லாம், 'இதற்கு இந்தியர்களுக்ுத் தகுதியில்லையா?' என நமக்கு ஆதங்கம் பொங்கும். நவீன உலகத்தை செதுக்கிய முக்கிய கண்டுபிடிப்புகளில் இந்தியர்களுக்கும் இடம் உண்டு. ஆனால் நம்மில் பலரே இதை அறியாதவர்களாக இருக்கிறோம். அப்படி இந்தியர்கள் உலகுக்கு அளித்த சில பெருமைக்குரிய கண்டுபிடிப்புகள் இங்கே:**

## பருத்தி

இன்று உலகமே பெருமிதத்தோடு உடுத்துவது பருத்தி இழைகளில் நெய்த காட்டன் ஆடைகளைத்தான். இயற்கை இழைகளில் உருவாகும் ஆடைகள் என்றுமே மேன்மையானவை. ஐரோப்பியர்கள் விலங்குகளைக் கொன்று, அவற்றின் தோலை ஆடைகளாக உடலில் போர்த்தித் திரிந்த காலத்தில், பருத்தியைப் பயிரிட்டு, அதிலிருந்து இழையெடுத்து ஆடைகள் நெய்து அணிந்த நாகரிக மனிதர்கள் இந்தியர்கள். சிந்து சமவெளி நாகரிக காலத்திலேயே பருத்தி விவசாயம் நமக்குக் கைவந்த கலை. முற்றி வெடித்த பஞ்சிலிருந்து இழையெடுத்து ஆடைகள் நெய்யும் நெசவுக் கலையும் நம்மிடம் இருந்தது.



வேட்டியும் புடவையும் நம் பாரம்பரிய ஆடைகளாக மாறின. 2,500 ஆண்டுகளுக்கு முன்பு இப்படி நவீன ஆடையாக நாம் அறிமுகம் செய்த காட்டன் ஆடைகள்தான் இன்றுவரை நவீன ஆடைகளாக உலகெங்கும் அணியப்படுகின்றன.

## பட்டன்

'பட்டன்' என்ற ஒரு விஷயம் இல்லாமல் போயிருந்தால், நாகரிகம் என்ற வார்த்தையே உருவாகி இருந்திருக்காது. உடைகளை நவீனமாக மாற்றியவை பட்டன்கள்தான். இந்த பட்டனைக் கண்டுபிடித்தது நம் முன்னோர்கள்தான். சிந்து சமவெளி நாகரிக நகரமான மொகஞ்சதாரோவில்தான் முதன்முதலாக பட்டன் உருவானது. அங்கே நடைபெற்ற அகழாய்வுகளில் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பட்டன்கள் கிடைத்துள்ளன. தமிழகத்திலும் இப்படிக் கிடைத்திருக்கின்றன.



## செஸ்

விஸ்வநாதன் ஆனந்த் ஏன் செஸ் விளையாட்டில் உலகம் போற்றும் சாம்பியனாகத் திகழ்கிறார் தெரியுமா? இந்த விளையாட்டு இந்தியர்களின் ரத்தத்தில் ஊறியது. ஆம், கண்டுபிடித்தது யார் என்பது தெரியாவிட்டாலும், சதுரங்க விளையாட்டு உருவானது நம் மண்ணில்தான்! கி.பி. ஆறாம் நூற்றாண்டில் குப்தப் பேரரசு ஆட்சிக்காலத்தில் செஸ் அறிமுகமானது.



## ரெடிமேட் வீடுகள்

அதிக எடையில்லாத உலோகங்களில் ரெடிமேட் சுவர்களைச் செய்து வைத்துக்கொண்டு, அவற்றை அப்படியே ஒரு இடத்தில் கொண்டுவந்து அடுக்கி சில மணி நேரங்களில் உருவாக்குபவை ரெடிமேட் வீடுகள் எனப்படுகின்றன. புயல், பூகம்பம் போன்ற இயற்கைச் சீற்றங்களால் தவிப்பவர்களுக்கு இப்படி வீடுகள் கட்டப்படுகின்றன. இது நவீனத் தயாரிப்பு என நாம் நினைக்கிறோம். ஆனால், 500 ஆண்டுகளுக்கு முன்பே இந்தத் தொழில்நுட்பம் இந்தியாவில் உருவாகிவிட்டது.



## ரூலர்

அழகழகான வண்ணங்களில் இப்போது பள்ளிக்கு குழந்தைகள் எடுத்துச் செல்லும் ஸ்கேல் என்ற அளவுகோலுக்கு முன்னோடி, ரூலர். உருண்டு நீண்டிருக்கும் 'ரூல் தடி' எனப்படும் இந்த ரூலரால்தான் அந்தக் காலத்தில் நீளத்தை அளப்பார்கள்; கோடுகள்

போடுவார்கள். இந்த ரூலரைக் கண்டுபிடித்தது நாம்தான். சிந்து சமவெளி நாகரிக காலத்தில் யானைத் தந்தம் கொண்டு ரூலர் செய்து பயன்படுத்தினார்கள். இதில் ஒன்று அகழாய்வில் கிடைத்தது. இதில் அளவீடு கோடுகள் துல்லியமாக செதுக்கப்பட்டுள்ளன.



## ஷாம்பு

தலைக்கு சீயக்காய் தேய்த்துக் குளிக்கும் வழக்கத்தை மாற்றியது ஷாம்பு. கண்களுக்கு எரிச்சல் இல்லாமல் நிமிடங்களில் தலை குளித்து புத்துணர்வு பெற ஷாம்பு உதவுகிறது. இந்த ஷாம்பு, இந்தியர்களின் கண்டுபிடிப்புதான். 1762ம் ஆண்டு வங்காள நவாப்புக்காக அவரது பணியாளர்கள் உருவாக்கியதே ஷாம்பு. ஆரம்பத்தில் இது மசாஜ் செய்யும் எண்ணெய் போல பயன்பட்டது. அதன்பிறகே தலைமுடியை சுத்தம் செய்யும் ஷாம்புவாக வடிவம் எடுத்தது.




## எண்களும் பூஜ்ஜியமும்

தசம எண் வரிசையை அரேபியர்களுக்கு முன்பு பயன்படுத்தியது நாம்தான். எண்களைக் கொண்டு உருவான எளிய சமன்பாடுகளுக்குத் தீர்வுகளை உருவாக்கித் தந்ததும் நாம்தான். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உருவான எண் வரிசையை ஏழாம் நூற்றாண்டில் பிரம்ம குப்தர் என்ற கணித அறிஞர் சீரமைத்துக் கொடுத்தார்.



## அறுவை சிகிச்சை

கி.மு ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுஸ்ருதர், ஆயுர்வேத மருத்துவ முறையில் அறுவை சிகிச்சையின் தந்தையாகக் கருதப்படுகிறார். உலகிலேயே முதல்முறையாக கண்புரை நோய் அறுவை சிகிச்சையைச் செய்தவர் இவர்தான். கண்களுக்குள் நுண்ணிய கருவிகளை வைத்து எப்படி அறுவை சிகிச்சை செய்கிறார்கள் என்பதை அறிய கிரேக்க அறிஞர்கள் பலர் அவரிடம் தேடி வந்தனர். இன்று முகத்தை அழகுபடுத்த செய்யப்படும் பிளாஸ்டிக் சர்ஜரி எனும் அறுவை சிகிச்சையின் தந்தை இவர்தான்.



## வைரம்

மண்ணுக்குள் புதைந்திருக்கும் வைரக்கல் அரிதான ஒரு கல் என்பதையும், அதை பாலீஷ் செய்தால் பளபளக்கும் என்பதையும் கண்டறிந்து அதை ஆபரணங்கள் செய்வதற்கு முதன்முதலில் பயன்படுத்தியது நாம்தான். 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வைர நகை செய்தோம். பதினெட்டாம் நூற்றாண்டில் பிரேசிலில் வைரச்சுரங்கம் கண்டறியப்படும் வரை, இந்திய வைரங்களை உலகமே விரும்பி வாங்கியது.



## வயர்லெஸ்

கம்பியில்லா தகவல்தொடர்பு எனப்படும் வயர்லெஸ் டெக்னாலஜியைக் கண்டறிந்து, தந்திகள் மூலம் தகவல்கள் அனுப்ப உதவியதற்காக மார்கோனிக்கு நோபல் பரிசு கிடைத்தது. அவருக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே நம் விஞ்ஞானி ஜெகதீஷ் சந்திர போஸ், வயர்லெஸ் தகவல்தொடர்பு முறையை வெற்றிகரமாக நிகழ்த்திக் காட்டினார். ரேடியோ, டெலிவிஷன், செல்போன் என நவீன டெக்னாலஜி முன்னேற்றங்கள் அனைத்துக்கும் அடிப்படையான வயர்லெஸ் தகவல்தொடர்பு முறையை 1895ம் ஆண்டில் கண்டறிந்த போஸ், அதற்கான அங்கீகாரத்தை நூறு ஆண்டுகள் கழித்தே பெற முடிந்தது.



## கண்ணாடி இழை வயர்

தொலைத்தொடர்பு வசதிகளை மிக எளிமை ஆக்கியவை ஃபைபர் ஆப்டிக் கேபிள் எனப்படும் கண்ணாடி இழை வயர்கள். நம் ஊரிலிருக்கும் ஒருவர், எங்கோ ஐரோப்பிய நகரில் இருப்பவரிடம் நினைத்த நொடியில் பேச முடிவதற்குக் காரணம், நகரங்கள் நாடுகளைத் தாண்டி கண்டங்களுக்கு இடையே நிலத்திலும் கடலுக்கு அடியிலும் பதிக்கப்பட்ட இந்த வயர்கள்தான். இன்டர்நெட் இணைப்புக்கும் இவையே பிரதானம். இந்த வயரைக் கண்டறிந்தவர், இந்தியரான நரேந்தர் சிங் கபானி. ●



இயற்பியல் படித்த ஓர் இளைஞன் நல்ல வேலையில் இருந்தான்; நல்ல சம்பளம்தான்! பிஸியான சூப்பர் மார்க்கெட்டில் விற்பனை மேலாளர். ஆனாலும் அவனுக்கு திருப்தி இல்லை. ''நான் படிச்ச பிஸிக்ஸுக்கு இந்நேரம் எங்கேயோ விஞ்ஞானியா இருந்திருக்கணும். அதை விட்டுட்டு துவரம்பருப்பையும் உளுந்தையும் எடை போட்டுக்கிட்டு திரியறேன்'' என்று சதா புலம்புவான். ''எந்த வேலை செய்தாலும், அதை நேசிக்கணும்'' என்று சூப்பர் மார்க்கெட்டின் உரிமையாளர் சொல்லிப் பார்த்தார். அவனுக்கு மண்டையில் ஏறவில்லை.

ஒருநாள் செய்தித்தாளில், 'இயற்பியல் படித்த ஆராய்ச்சி உதவியாளர் தேவை' என்ற விளம்பரத்தைப் பார்த்தான். விண்ணப்பித்தான். இங்கே கிடைக்கும் அதே சம்பளம்தான் தருவதாகச் சொன்னார்கள். 'அதே சம்பளத்துக்கு ஏன் போறே' என்று கேட்ட முதலாளியிடம், ''என் படிப்புக்குப் பொருத்தமான வேலை'' என்று நக்கலாக சொல்லிவிட்டுப் போனான்.

முதல் நாள் போனதும் தலைமை விஞ்ஞானி அவனை அழைத்து சில மரத்துண்டுகளைக் கொடுத்து, ''மரங்களின் வெப்பக் கடத்து திறன் பற்றி ஆராய்ச்சி செய்கிறோம். நீ ஆராய்ச்சி செய்து ரிப்போர்ட் ரெடி பண்ணு'' என்று சொன்னார். அவன் படித்த இயற்பியலுக்கும் இந்த ஆராய்ச்சிக்கூடத்துக்கும் சம்பந்தமே இல்லாதது போல தெரிந்தது. யாரும் அவனுக்கு வழிகாட்டவும் இல்லை. திக்குத் தெரியாத காட்டில்



புதுமழை பெய்து ஆற்றில் வரும் வெள்ளத்தில் ஏராளமான மீன்கள் துள்ளி விளையாடுவதாக தெருவில் சொன்னார்கள். ''பக்கத்து வீட்டுக்காரர் நேத்து தூண்டில் எடுத்துக்கிட்டுப் போய் நிறைய மீன் பிடிச்சாராம். அவங்க வீட்ல மீன் குழம்பு, மீன் வறுவல். வாசனையே ஊரைக் கூட்டிச்சு. இன்னைக்கு ஞாயிற்றுக்கிழமை. சும்மாதானே இருக்கீங்க... போய் மீன் பிடிங்களேன்'' என்று மனைவி தூண்டிவிட்டதில், தூண்டிலோடு கிளம்பினான் ஓர் இளைஞன். அவனுக்கு இது புது அனுபவம்.

ஊரைத் தாண்டி ஆற்றங்கரைக்கு வந்தபோது ஏராளமான கூட்டம். தூண்டிலோடு கரையில் உட்கார்ந்திருந்த பலரும் இவனைப்

# கதை நேரம்

தேசத்துக்காக பல சாகசங்கள் புரியும் விருப்பத்துடன் ராணுவத்தில் சேர்ந்தான் ஓர் இளைஞன். பணியில் சேர்ந்த முதல் நாளே அவனுக்கு படைப்பிரிவு அதிகாரி அலுவலகத்திலிருந்து அழைப்பு. நவீன ரக துப்பாக்கியைக் கையில் கொடுத்து எல்லைப் பாதுகாப்புக்கு அனுப்புவார்கள் என்ற கனவோடு போனான்.

அதிகாரி அவனை ஏற இறங்கப் பார்த்தார். ''உனக்கு டைப் அடிக்கத் தெரியுமா?'' என்றார். குழப்பத்தோடு அவன், ''தெரியும்'' என்றான். அவன் கையில் ஒரு பேப்பரைக் கொடுத்த அதிகாரி, ''எனக்கு வரும் கடிதங்களுக்கு பதில் அடித்து அனுப்ப ஒரு ஆள் கிடைக்காமல் தவித்துக் கொண்டிருந்தேன். நல்லவேளை, நீ வந்தாய். இதை டைப் அடி. நீ ஒழுங்காக செய்கிறாயா என்று பார்ப்போம்'' என்றார்.

அதோடு நிற்கவில்லை. பின்னாலேயே வந்து, அவன் டைப் அடிப்பதை மேற்பார்வை செய்தார். அவனுக்குக் கடுப்பு. போர்

விட்டது போல விழித்தான்.

வீட்டுக்குத் திரும்பும்போது, என்சைக்ளோபீடியா விற்க வந்தான் ஒருவன். ''நீங்கள் இதை வாங்கினால், ஒரு அறிவியல் கேள்விக்கு பல பக்கங்களில் விளக்கமாக விடை கிடைக்கும்!'' என்றான். அதை வாங்கிய இளைஞன், 'மரங்களின் வெப்பக் கடத்து திறன் பற்றி பதில் வேண்டும்' என கேள்வி எழுதிக் கொடுத்தான்.

மறுநாள் தலைமை விஞ்ஞானி அவனைக் கூப்பிட்டார். ''ஒரு என்சைக்ளோபீடியா கம்பெனியிலிருந்து, மரங்களின் வெப்பக் கடத்து திறன் பற்றி கட்டுரை கேட்டிருக்கிறார்கள். எழுதிக் கொடுத்துவிடு!'' என கட்டளையிட்டார். அவன் கேட்ட கேள்வி அவனிடமே பதிலுக்கு வந்தது அறிந்து மயங்கி விழுந்தான் அவன்.

சுயமாக செய்யத் தெரியாத வேலையில் இறங்கக்கூடாது!



பார்த்து புன்னகைத்தார்கள். 'எல்லோரும் பொண்டாட்டி பேச்சைக் கேட்டு வந்திருப்பானுங்க போல' என நினைத்தபடி, கிடைத்த இடைவெளியில் உட்கார்ந்து தூண்டில் போட்டான் அவன்.

நீண்ட நேரமாகியும் தக்கை அசையவில்லை. அக்கம்பக்கத்தில் கவனித்தால் எல்லோருமே மீன் கிடைக்காத ஏமாற்றத்தில் இருப்பது புரிந்தது. 'வேலை மெனக்கெட்டு ஒரு விடுமுறை நாளில், புது தூண்டிலை விலைக்கு வாங்கி வந்து இப்படி வெயிலில் உட்கார்ந்திருக்கிறோமே... இதற்கான பலன் துளியாவது இருக்குமா' எனக் கவலை வந்தது.

பல மணி நேரமாகியும், சில சிறிய மீன்கள் மட்டுமே சிக்கின. மனைவி ஏமாற்றம் அடைந்து, ''இதையெல்லாம் போட்டு குழம்பு வைக்க முடியாது. பூனைக்குப் போடுங்க'' என்றாள். பூனைக்குப் போட்டால், அது சாப்பிடவில்லை. வழக்கமாக ஒரு டப்பாவிலிருந்து உணவை எடுத்து பூனைக்குப் போடுவான். அந்த டப்பாவில் இந்த மீனைப் போட்டு, அதன்பின் எடுத்துவந்து பூனைக்குப் போட்டதும்தான் சாப்பிட்டது. அப்போதுதான் அவனுக்கு உண்மை புரிந்தது.

சுயமாக யோசித்துச் செய்யாத வேலையில் பலன் கிடைக்காது!

புரிய வந்தவனை டைப்பிஸ்ட் ஆக்க சூழ்ச்சி நடக்கிறதா? தப்புத் தப்பாக டைப் அடித்துக் கொடுத்தால் தப்பிக்கலாம் என நினைத்தான். ஒவ்வொரு வரியிலும் குறைந்தது இரண்டு, மூன்று தவறுகளாவது இருக்கும்படி டைப் செய்து அவரிடம் நீட்டினான்.

வாங்கிப் பார்த்தவர் அவனுக்குக் கை கொடுத்து, ''நீ இரண்டு டெஸ்ட்களிலும் பாஸ் செய்துவிட்டாய். இன்று முதல் உனக்கு இதுதான் டியூட்டி'' என்றார்.

''என்ன டெஸ்ட்?'' அவன் குழம்பினான்.

''இதற்கு முன் இங்கு வந்தவர்கள், டைப்ரைட்டர் எது என தெரியாமல், பிரிண்டிங் மெஷினில் போய் எழுத்துகளைத் தேடினார்கள். அவர்கள் ஒரு பக்கத்தில் நூறு தவறுகள் செய்தார்கள். நீ பரவாயில்லை, ஐம்பது தப்புதான்'' என்றார்.

யாரையும் சார்ந்திருக்காமல் சுயமாக செயல்படுபவர்களுக்கு தேவைகள் குறைவு. ●














# பெருமிதமான சுதேசி தேசம்!

**நம் எதிர்காலத்தை நாமே தீர்மானித்துக்கொள்வது எவ்வளவு பெருமைக்குரிய விஷயம். வீட்டில் இதற்குக் கிடைக்கும் சுதந்திரம் நாட்டிலும் கிடைக்கிறது என்றால், அதுதான் சுதந்திர தேசம். இந்தியா அப்படிப்பட்ட தேசமாக இருக்கிறது. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு, இந்தியா. பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவை விட்டுப் போனபிறகு நாம் அநாதரவாக ஆகிவிடுவோம் என உலகம் நினைத்தது. இந்தியர்களுக்கு சுயமாக எதையும் செய்யத் தெரியாது என்று மேற்கத்திய நாடுகள் ஏளனம் செய்தன. உதவி செய்யவும் பணக்கார நாடுகள் தயங்கின. சுயமான முயற்சிகளில், சுதேசி சாதனைகளில் நாம் உயர்ந்தோம். அந்தப் பெருமிதங்களில் சில:**

❖ அமெரிக்கா சுதந்திரம் அடைந்தபிறகு அனைவருக்கும் ஓட்டு போடும் உரிமை கிடைக்க 150 ஆண்டுகள் ஆனது. ஆனால், சுதந்திர இந்தியாவின் முதல் தேர்தலிலேயே எல்லோருக்கும் வாக்குரிமை கிடைத்துவிட்டது. உலகில் அதிகம் பேர் வாக்களிக்கும் ஜனநாயக நாடு இந்தியா.

❖ மக்களுக்கு எல்லா உரிமைகளையும் உறுதி செய்யும் உலகின் மிக நீளமான அரசியல் சட்டம் நம்முடையதுதான். மத்திய அரசு செய்ய வேண்டியது, மாநில அரசு செய்ய வேண்டியது, மக்கள் செய்ய வேண்டியது என்று தெளிவாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள்.

❖ சுதந்திரம் வாங்கிய நான்கே ஆண்டுகளில் முதல் ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தியது. சில ஆண்டுகளுக்கு முன்பு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியையும் நடத்தியது. இன்னும் ஒலிம்பிக் மட்டுமே பாக்கி.

❖ இந்தியாவின் முதல் ஐ.ஐ.டி காரக்பூரில் 1951ம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து மும்பை, டெல்லி, சென்னை, பெங்களூரு என பல நகரங்களிலும் ஐ.ஐ.டி.க்கள் தொடங்கப்பட்டன. இதேபோல ஐ.ஐ.எம் எனப்படும் மேலாண்மை நிறுவனங்களும் உருவாக்கப்பட்டன. இவற்றில் படித்து முடித்த இந்திய இளைஞர்கள், உலகின் பல்வேறு நிறுவனங்களையும் சென்று நிர்வாகம் செய்ய ஆரம்பித்தார்கள்.

❖ உலகின் பல நாடுகளுக்கு தொலைக்காட்சி என்றால் என்னவென்றே தெரியாத காலத்தில், 1959ம் ஆண்டே இந்தியாவில் தூர்தர்ஷன் ஒளிபரப்பு தொடங்கிவிட்டது.

❖ இயல்பான மழலைப்பேறு இல்லாதவர்களுக்கு குழந்தை பெறுவதற்கு வகை செய்யும் சோதனைக்குழாய் குழந்தை முறையை 1978ம் ஆண்டே இந்தியா வெற்றிகரமாகச் செய்துவிட்டது.

❖ விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை ராகேஷ் சர்மா பெற்றார். ரஷ்ய விண்கலத்தில் அவர் விண்வெளி சென்றார்.

❖ பல நாடுகளில் சாதாரண போன் சேவைகளே சரியாக செயல்படாத காலத்தில், 1995ம் ஆண்டு

இந்தியாவில் செல்போன் சேவைகள் துவங்கிவிட்டன.

❖ அமெரிக்காவுக்கு அடுத்து அதிக நீளத்துக்கு சாலைகள் இருப்பது இந்தியாவில்தான். சுமார் 30 லட்சத்து 57 ஆயிரம் கி.மீ நீள சாலைகள் உள்ளன.

❖ உலகின் பெரிய ரயில்வே அமைப்புகளில் இந்திய ரயில்வேயும் ஒன்று. இந்தியாவில் அதிகம் பேர் பணிபுரியும் நிறுவனம், இந்திய ரயில்வே. 10 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பணி செய்கிறார்கள். 1,19,630 கி.மீ நீள ரயில் பாதை இந்தியாவில் உள்ளது. 7,216 ரயில் நிலையங்கள் இருக்கின்றன.

❖ உலகிலேயே அதிக தபால் நிலையங்கள் இருக்கும் நாடு இந்தியா. மிகக் குறைந்த கட்டணத்தில் உள்ளடங்கிய கிராமங்களுக்குக்கூட கடிதங்களைக் கொண்டு செல்கிறார்கள் நம் அஞ்சல் ஊழியர்கள்.

❖ பாலுக்கு பற்றாக்குறை ஏற்பட்டு குழந்தைகள் தவித்த இந்தியா, இன்று உலகிலேயே அதிக பால் உற்பத்தி செய்யும் நாடாக மாறியுள்ளது. பால் பதப்படுத்தல் தொழில்நுட்பத்தை சுதேசியாகக் கண்டறிந்து வெண்மைப் புரட்சி செய்த டாக்டர் வர்கீஸ் குரியன் இதற்குக் காரணம்.

❖ பசுமைப் புரட்சியின் விளைவாக உணவு உற்பத்தி அதிகரித்தது. இதுவே பட்டினிச் சாவுகளைத் தடுத்தது. கோதுமைக்காக வெளிநாடுகளை நம்பியிருந்த நாம், இன்று ஏற்றுமதி செய்கிறோம். இப்போது இந்தியாவிலேயே 100% இயற்கை விவசாயம் செய்யும் மாநிலமாக சிக்கிம் மாறியிருக்கிறது.

❖ 2004ம் ஆண்டில் சுனாமி இந்தியாவைத் தாக்கியபோது, 'அந்நிய உதவிகள் தேவையில்லை' என இந்தியா மறுத்தது. வெளிநாட்டு உதவிகளுக்காகக் கையேந்தி நிற்கும் நிலையிலிருந்து இந்தியா முன்னேறிவிட்டது. இப்போது நாம் மற்ற நாடுகளுக்கு உதவி செய்யும் நிலைக்குப்போயிருக்கிறோம்.

❖ சீனா, ஜப்பான், சுவிட்சர்லாந்து, ரஷ்யாவுக்கு அடுத்து அமெரிக்க டாலரில் அதிக அந்நியச் செலாவணி இருப்பு வைத்திருக்கும் ஐந்தாவது பெரிய நாடு இந்தியா.●





# குளம் சீரமைப்பு பணி நிறைவு விழாவில் ராம்ராஜ் காட்டன்

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம் சாமளாபுரம் கிராமத்தில் அமைந்துள்ள பெரியகுளத்தில் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டிலான புனரமைப்புப் பணிகள் நிறைவு விழா 03.08.2021 செவ்வாய்க்கிழமை அன்று சிறப்பாக நடைபெற்றது. திருப்பூர் மேற்கு ரோட்டரி சங்கமும், திருப்பூர் தெற்கு ரோட்டரி நொய்யல் நீர் மேலாண்மை அறக்கட்டளையும் இணைந்து நடத்திய **"நம்ம குளம்"** திருவிழாவில் ராம்ராஜ் காட்டன் நிறுவன தலைவர் திரு கே ஆர் நாகராஜன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, இத்திட்டத்திற்கான நன்கொடையாக ரூபாய் 5 லட்சத்துக்கான காசோலையை வழங்கி விழாவில் சிறப்புரை ஆற்றினார். ●

# சுதேசி இந்தியாவின் சாதனைகள்!

**நம் தேசம் 75வது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறது. ஒரு காலத்தில் 'பாம்பாட்டிகளின் தேசம்' என இந்தியாவைக் கிண்டல் செய்தன பணக்கார நாடுகள். இன்று உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதார வல்லரசாக இந்தியா மாறியிருக்கிறது. இந்தியர்களுக்கு எங்கு சென்றாலும் சிறப்பும் மதிப்பும் கிடைக்கிறது. இதற்குக் காரணம், சுதேசி தேசமாக நாம் செய்த சாதனைகள். நாம் நினைத்து நினைத்துப் பெருமிதப்பட வேண்டிய அந்த சாதனைகளில் சில:**

❖ இன்று கூகுள், மைக்ரோசாஃப்ட் என தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பல நிறுவனங்களில் தலைமைப் பொறுப்பு வகிப்பவர்கள் இந்தியர்களே! உலகின் எந்த நாட்டுக்குப் போனாலும், அங்கு இந்தியர்கள் கொடி கட்டிப் பறப்பதைப் பார்க்க முடியும். கம்ப்யூட்டர் மற்றும் அது சார்ந்த டெக்னாலஜி துறைகளில் இந்தியர்களின் உதவி இல்லாமல் யாரும் எதுவும் செய்ய முடியாது. இதற்கு எப்போதோ இந்தியா விதை போட்டுவிட்டது. 1953ம் ஆண்டே சிறிய அனலாக் கம்ப்யூட்டர் ஒன்றை இந்தியா உருவாக்கிவிட்டது. 1955ல் கம்ப்யூட்டர் இந்தியாவில் பயன்பாட்டுக்கு வந்தது. 'பரம்' என்ற வரிசையில் பல சூப்பர் கம்ப்யூட்டர்களை இந்தியா உருவாக்கியுள்ளது. உலக அளவில் ஐ.டி தொழிலில் இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது.

❖ அணுசக்தியை ஆக்கபூர்வமாகவும் போர்க்கருவியாகவும் பயன்படுத்தும் வல்லமை பெற்ற நாடுகளில் இந்தியாவும் ஒன்று. 1974ம் ஆண்டிலேயே அணுகுண்டு சோதனை செய்து, உலகின் ஐந்து அணு ஆயுத நாடுகளின் பட்டியலில் இந்தியா இணைந்துவிட்டது. என்றாலும், 'எப்படிப்பட்ட எதிரிக்கு எதிராகவும் முதலில் நாங்கள் அணுகுண்டுகளைப் பயன்படுத்த மாட்டோம். திருப்பி அடிக்க மட்டுமே பயன்படுத்துவோம்' என்று சமாதானப் புறாவாக ஜொலிக்கும் தேசம் நம் தேசம்.

❖ மருத்துவ ஆராய்ச்சிகளுக்கும் ஆயுத



சோதனைக்கும் உதவும் நியூக்ளியர் ரீயாக்டரை ஆசியாவிலேயே முதலாவதாக 1956ம் ஆண்டில் இந்தியா உருவாக்கியது. அப்சரா என்ற பெயருள்ள அது இப்போதும் பயன்பாட்டில் உள்ளது. அணுசக்தி மின்சாரத்தில் முதன்மையில் இருக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

❖ கடல்களில் ஆதிக்கம் செலுத்துவதற்கு நீர்மூழ்கிக் கப்பல்கள் அவசியம். அந்த நீர்மூழ்கிக் கப்பல்கள் அணுசக்தியால் இயங்கினால்தான், நீண்ட தூரத்துக்குக் கடலில் நீண்ட நேரம் பயணம் செய்ய முடியும். அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களை சொந்தமாக உருவாக்கும் திறனுள்ள சில நாடுகளில் இந்தியாவும் ஒன்று. 2009ம் ஆண்டு இந்தியா அப்படி ஐ.என்.எஸ் அரிஹந்த் கப்பலை உருவாக்கியது. இதில் 3,500 கி.மீ தூரம் வரை சென்று தாக்கும் ஏவுகணைகள் உள்ளன.

❖ வல்லரசுக்கு அடையாளம், விமானம் தாங்கி போர்க்கப்பல். மிக நீளமான ஒரு போர்க்கப்பலில் விமானங்கள், ஹெலிகாப்டர்கள் வரிசையாக நிற்கும். கப்பலிலேயே ஒரு விமான ஓடுபாதை இருக்கும். அதிலிருந்து போர் விமானங்கள் கிளம்பிச் சென்று தாக்குதல் நடத்தும். போர்க்கப்பல்களை நிறைய வைத்திருப்பதால்தான், உலகின் எந்த மூலைக்கும் சென்று தாக்குதல் நடத்துகிறது அமெரிக்கா. இப்போது அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளைப் போலவே விமானம் தாங்கி போர்க் கப்பல்களை உருவாக்கும் திறன் படைத்த நாடாகி உள்ளது இந்தியா. ஐ.என்.எஸ் விக்ராந்த் கப்பலை சுதேசி இந்தியா சொந்த முயற்சியில் உருவாக்கியிருக்கிறது.

❖ நீண்ட தூரம் சென்று துல்லியமாக எதிரிகளைத் தாக்கும் ஏவுகணைகளை சொந்தமாக உருவாக்கும் வல்லமையுள்ள ஆறு நாடுகளில் இந்தியாவும் ஒன்று. மற்றவை அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன். இந்தியாவின் பிரமோஸ் சூப்பர்சானிக் ஏவுகணை, மணிக்கு 3,675 தூரம் பயணம் செய்து தாக்கும் வல்லமை பெற்றது.

❖ குறைந்த எடையுள்ள போர் விமானங்களை சொந்தமாக உருவாக்கும் திறனையும் இந்தியா பெற்றுவிட்டது. தேஜாஸ் விமானங்கள் இந்த ரகம்தான். 2019ம் ஆண்டு இவற்றை விமானப்படையில் இணைக்க ஒப்புதல் கிடைத்துவிட்டது.

❖ விண்ணில் வெகு உயரத்தில் சுற்றியபடி நம்மை உளவுபார்க்கும் செயற்கைக்கோள்களை ஏவுகணைகளால் தாக்கி அழிக்கும் வல்லமையை நாம் பெற்றுவிட்டோம். 'மிஷன் சக்தி' என்ற பெயரில் இந்தத் திட்டம் 2019ல் வெற்றியடைந்தது.


❖ இந்தியாவின் ஆரம்ப கால விண்வெளி முயற்சிகள் தடுமாற்றத்துடன் நடைபெற்றன. திருவனந்தபுரம் அருகே இருந்த விண்வெளி தளத்துக்கு ஒரு சைக்கிளின் பின் இருக்கையில் வைத்துதான் முதல் ராக்கெட்டை எடுத்துச் சென்று விண்ணில் ஏவினர். இன்று விண்வெளி இந்தியாவுக்கு வசமாகிவிட்டது. 2017ம் ஆண்டு ஒரே ராக்கெட்டில் 104 செயற்கைக்கோள்களை விண்ணுக்கு எடுத்துச் சென்று உலக சாதனை செய்தது இந்தியா.

❖ விண்வெளிக்கு முதலில் ராக்கெட்டை அனுப்பியது ரஷ்யாவாக இருக்கலாம். நிலவில் முதலில் காலடித்தடம் பதித்தது ஓர் அமெரிக்கராக இருக்கலாம். ஆனால், நிலவில் தண்ணீர் இருப்பதைக் கண்டுபிடித்தது இந்தியாதான். நிலவுக்கு சந்திரயான் 1 விண்கலத்தை 2008ம் ஆண்டு வெற்றிகரமாக ஏவியது இந்தியா. நிலவில் தண்ணீர் இருப்பதை சந்திரயான் கண்டறிந்தது.

❖ இதேபோல செவ்வாய் கிரகத்தை எட்டுவதிலும் இந்தியா சாதனை புரிந்தது. இந்தியா உருவாக்கிய மங்கள்யான் விண்கலம் 2014 செப்டம்பரில் செவ்வாய் கிரகம் சென்றடைந்தது. அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய விண்வெளி அமைப்புக்கு அடுத்து செவ்வாயை எட்டிய நான்காவது நாடு இந்தியா. செவ்வாயை அடைவதில் முதல் முயற்சியிலேயே வெற்றியடைந்தது இந்தியா மட்டும்தான்.

❖ வீடு தேடி வரும் உணவு முதல் வாடகை வாகன சேவைகள் வரை அனைத்துக்கும் அடிப்படையானது ஜி.பி.எஸ் தொழில்நுட்பம். இது அமெரிக்கா உருவாக்கியது. இதன் மூலம் அமெரிக்கா உளவு பார்க்க முடியும் என்பதால், ஜி.பி.எஸ் தொழில்நுட்பத்துக்கு இணையாக NAVIC (Navigation with Indian Constellation) என்ற தொழில்நுட்பத்தை இந்தியா உருவாக்கியுள்ளது.

❖ உலகின் அதி உயரமான இடத்தில் உள்ள ரயில் பாலம், செனாப் பாலம். செனாப் நதிக்கு மேலே 1,178 அடி உயரத்தில் இது இருக்கிறது. உலகின் மிக உயரமான பகுதியில் இருக்கும் சாலைப் பாலம், இமயமலையில் டிராஸ் மற்றும் சுரு நதிகளுக்கு இடையே அமைந்துள்ளது. இந்த இரண்டுமே இந்தியாவின் பெருமைகள். ●



உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**

**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

- மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

**வெண்மை**
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
**போன்:**
**0421-4304106, 98422 74137**

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiar.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code-ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.


**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**



## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)

| ஒரு வருட சந்தா: | 2 வருட சந்தா: |
| --- | --- |
| ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | ரூ.~~380~~ ரூ.250 மட்டும். |



## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை


(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)

| ஒரு வருட சந்தா: | 2 வருட சந்தா: |
| --- | --- |
| ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | ரூ.~~380~~ ரூ.250 மட்டும். |

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு
**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**



Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 & Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL


Inners for Winners
RAMRAJ
BANIANS
www.ramrajcotton.in

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2019-21. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-9-2021. Posted at Tirupur BPC on 5th of every month.

